வானவில்

VAANAVIL
ISSUE – 41 MAY 2014

இதழ் - 41 வைகாசி 2014

# யாழ்ப்பாண பல்கலைக்கழக நிலவரம்:

## கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்ட கதையா?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள சில மாணவர் குழுக்களாலும், சில விரிவுரையாளப் 'பெருந்தகை'களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சில நடவடிக்கைகளைப் பார்க்கும்போது தமிழ் பேசும் மக்கள் கவலைப்படாமல் இருக்க முடியாது.

பொதுவாக கல்விக்கூடங்களை அரசியல்மயப்படுத்துவது மிகவும் தவறான காரியம். மாணவர்களோ ஆசிரியர்களோ தமது உரிமைகளுக்காகப் போராடுவதை நாம் இங்கு குறிப்பிடவில்லை. அது அரசியல் அல்ல. அது அவர்களது அடிப்படை உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயம்.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சம்பவங்கள் ஜனநாயகபூர்வமான, நாகரீகமான அரசியலாக இருந்தால் கூட அதை மன்னிக்கலாம். இங்கு 'போராட்டம்' என்ற பெயரில் நடாத்தப்படும் செயல்கள் புலிப்பயங்கரவாத, பாசிசவாதப் போக்கின் மிச்சசொச்சங்கள்.

இங்குள்ள சில குழுக்கள் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் வெறும் அரச எதிர்ப்புச் செயற்பாடுகள், சில கட்சிகளுக்கெதிரான செயற்பாடுகள், குறிப்பிட்ட அரச அதிகாரிகளுக்கு எதிரான செயற்பாடுகள், இனவாதப் பிரச்சாரங்கள், பிரிவினைவாத கருத்துகளைப் பரப்புவது என முற்றுமுழுதாக எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளாகவே இருக்கின்றன.

இந்தச் ஒரு சிறிய குழுவினர் மேற்கொள்ளும் இச்செயற்பாடுகளால் பெரும்பான்மையான மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது.



ஒருசில புல்லுருவி மாணவர்களின் இந்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய ஆசிரியர்களில் ஒரு சாரார் தமது சொந்த இலாபம் கருதியும், தாம் சார்ந்திருக்கும் தமிழ் இனவாத அரசியல் காரணமாகவும் மாணவர்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதிலேயே அக்கறையாக இருக்கின்றனர்

இந்த நாசகாரப் போக்கிற்கு எதிராக பல்கலைக்கழக உபவேந்தரோ ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளோ நடவடிக்கை எடுக்க முற்பட்டால், அவர்களை 'அரசாங்கத்தின் கைக்கூலிகள்' என முத்திரை குத்துவதுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கையாட்கள் எனவும் முத்திரை குத்தி மலினமான பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

இதில் வேதனையான விடயம் என்னவெனில், இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மட்டுமின்றி, பெரும்பாலான விரிவுரையாளர்களுக்கும் கூட இந்தப் பல்கலைக்கழகம் எவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டது என்பது தெரியாமல் இருப்பதுதான்.

அதனால் இந்தப் பல்கலைக்கழகத்தை ஆரம்பத்தில் இருந்தே வரவிடாமல் தடுக்க முயன்று அது கைகூடாமல் போனபின்பும், காலத்துக்காலம் இந்தப் பல்கலைக்கழகத்தை செயற்படவிடாமல் முடக்க முயற்சித்து வரும் பிற்போக்கு தமிழ் அரசியல் சக்திகளின் நோக்கத்தை இந்த மாணவர்களும் ஆசிரியர்களும் தெரிந்தோ தெரியாமலோ பூர்த்தி செய்யும் கைங்கரியத்தைச் செய்து வருகின்றனர்.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் பல பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வந்த போதிலும், தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கை ஆட்சியாளர்களால் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டே வந்தது.

அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்று ஐக்கியப்பட்ட குரலில் கோருவதற்குப் பதிலாக, ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் கட்சி 'இந்துப் பல்கலைக்கழகம்' வேண்டும் என்றும், எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் தமிழரசுக்கட்சி 'தமிழ் பல்கலைக்கழகம்' வேண்டும் என்றும் ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் செய்ததால், ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் மக்களின் பல்கலைக்கழகக் கோரிக்கையைத் தட்டிக்கழிப்பதற்கு அது ஒரு வசதியாகப் போய்விட்டது.

1965இல் டட்லி சேனநாயக்க தலைமையில் அமைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழுகட்சி கூட்டரசாங்கத்தில் தமிழரசு – தமிழ்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..

# முள்ளிவாய்க்கால் ஐந்து வருடங்கள்

**கால்** நூற்றாண்டு காலமாக, போர் முனையிலும் மக்கள் வாழும் நகரங்களிலும் கிராமங்களிலும் இலங்கையில் இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்த குண்டுச்சத்தங்கள் ஓய்ந்து 5 வருடங்களாகின்றன. இதனால் பல ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. உடன்பிறப்புகளின் அகால மரணங்களால் தாங்கொணாத் துயருறும் மக்களின் அழுகுரல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. எப்போது, எங்கே, எந்தக்கணத்தில் தற்கொலைக் குண்டு வெடிக்கலாம் அல்லது கொலை நிகழலாம் என்ற நிலைமை மாறியுள்ளது. இலங்கையில் வாழும் அனைத்தின மக்களும் நிம்மதி பெருமூச்சு விடுகிறார்கள். யுத்தம் நிறுத்தப்பட்டதால் முழு இலங்கையும் பொருளாதார நிலையிலும் ஓரளவு முன்னேற்றங்கண்டு வருகின்றது.

போர், யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை. பின்னர் மீண்டும் போர், யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை என எத்தனை தடவைகள்? யுத்தநிறுத்தங்களோடு ஒட்டிய (இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நிகழ்ந்த) பேச்சுவார்த்தைகளில் தற்காலிக சமாதான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன, நிரந்தர தீர்வு பற்றியும் பேசப்பட்டன. 1975இல் ஆளுந்(சிங்களத்)தரப்பு சார்பு தமிழர், யாழ்ப்பாணம் மேயர் துரையப்பாவை கொல்லுதலில் ஆரம்பித்து, 1982இல் (இதற்கு முன்னரும் புலி இயக்கத்தினுள் இரகசியமான முறையில் சில உட்கொலைகள் நிகழ்ந்துள்ளன.) யாழ்ப்பாணம் சித்திரா அச்சகத்தில் வைத்து பகிரங்கமாக படுகொலை செய்யப்பட்ட சக தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கத்தை சேர்ந்த சுந்தரத்தில் விருட்சமுற்று, 'நீ எங்களோடு இல்லையெனில் நீ எதிரியுடன் இருக்கிறாய்' என பல்லாயிரம் பேர்கள் (குறுந்தமிழ் தேசியவாதிகளின் பாஷையில் துரோகிகள்) கொன்றொழிக்கப்பட்டார்கள். இதனால் தமிழர்கள் மத்தியில் மாற்றுக்கருத்துகள் நசுக்கப்பட்டு, புலிகள் தமிழர்களின் ஏகபோக பிரதிநிதிகளாக உருவெடுத்தார்கள். ஒருபுறம் புலிகள் இலங்கை இராணுவத்துடன் போர்முனையில் சமநிலையை பேணியதாலும், மறுபுறம் புலிகளிடம் தமது பாசிச கட்டுபாட்டுக்குட்பட்ட பிரதேசமும் இருந்ததினால், இலங்கையின் உள்நாட்டு யுத்தம் இருதரப்பாலும் வெல்லப்பட முடியாதென்றே பல அவதானிகளால் மீண்டும் மீண்டும் கூறப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் புலிகளின் முற்றுமுழுதான அழிவை தாங்கமுடியாதவர்கள் மனிதஉரிமைக் கோசங்களுடன் இப்போது எம்மிடையே வலம் வருகிறார்கள். இவர்கள் சொல்கிறார்கள், முள்ளிவாய்க்காலில் தமிழ் இனப்படுகொலை நிகழ்ந்துள்ளதாம். இந்த 'மனிதஉரிமை'க் காவலர்கள், புலிகள் பல ஆயிரக்கணக்கான மாற்றுக் கருத்தாளர்களை கொன்று குவித்தபோதும், வடமாகாணத்திலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட போதும், பள்ளிவாசல்களில் வைத்து முஸ்லீம்களைக் கொன்ற போதும், நடு இரவில் கிராமங்கிராமமாக புகுந்து அப்பாவி சிங்கள மக்களை வெட்டியும் சுட்டும் வெறியாட்டம் ஆடியபோதும், சிறுவர்களை பலவந்தமாக பிடித்து சென்று படைகளில் இணைத்தபோதும், முள்ளிவாய்க்காலில் நான்கு இலட்சம் தமிழ் மக்களை மனிதக்கேடயங்களாக வைத்திருந்தபோதும் எங்கு இருந்தார்கள் என்பது தெரியாதல்ல. இவர்கள் அப்போது புலிகளை வெளிப்படையாக ஆதரித்திருந்தார்கள் அல்லது 'போராட்டத்தில் இதெல்லாம் சகஜம்' என சப்புக்கட்டை கூறி தமிழ் தேசியவாதத்தில் ஊறிப் போயிருந்தார்கள். இந்த காவலர்கள் சர்வதேச விசாரணை வேண்டும், யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த தற்போதைய இலங்கை அரசு தண்டிக்கப்பட வேண்டும் என்கிறார்கள்.

இலங்கையில் 2002 ஆண்டிற்கும் 2009 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை விசாரிப்பதற்கு விசாரணைக் குழுவொன்றினை நியமிக்குமாறு ஐ. நா. மனித உரிமைகள் சபை கடந்த மார்ச் மாதம் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது. 2002 ஆண்டில் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்கா அரசிற்குமிடையே ஏற்பட்ட யுத்த நிறுத்தத்திற்கு பின்னரான சம்பவங்களுக்கே ஐ.நா. மனித உரிமைகள் சபை (சர்வதேசம் என்ற சொல்லாடலின் பின்னே பதுங்கியுள்ள 23 நாடுகள்) முக்கியத்துவம் அளிக்கின்றது என்பதை இத்தீர்மானம் வெளிப்படையாக சொல்கின்றது.

வெறும் ஏழரையாண்டு காலப்பகுதியில் நிகழ்ந்த சம்பவங்கள் இரு தரப்பினரை, அதாவது புலிகள் - அரசு என்ற தரப்பினரை உள்ளடக்கியது. இதில் புலிகள் 2009 ஆண்டில் முற்றுமுழுதாக அழிந்துவிட்டார்கள், ரணில் விக்கிரமசிங்கா அரசு 2004 ஆண்டில் கலைக்கப்பட்டு விட்டது. எனவே விசாரணையின் பின்னர் குற்றஞ்சாட்டப்பட போகின்றவர்கள், தற்போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் மகிந்த ராஜபக்ச அரசு என்பது விசாரணையின் முன்னரே நிரூபணமாகிவிட்டது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இந்த தீர்மானத்தின் மூலம், தற்போதைய இலங்கை அரசினை கலைப்பதே சர்வதேசத்தின் இலக்கு, நிகழ்ச்சி நிரல் என்பது தெட்டத்தெளிவாக அம்பலமாகியுள்ளது. 2002 இற்கு முன்னர் நிகழ்ந்த இனக்கலவரங்கள், யாழ்ப்பாணம் நூலக எரிப்பு, வெலிக்கடை சிறைப்படுகொலைகள், அரசியல் படுகொலைகள், இனச்சுத்திகரிப்பு, வதை முகாம் சித்திரவதைகள், பலவந்த ஆட்சேர்ப்பு போன்றவற்றினை விசாரிப்பது இந்த அரசினை கலைக்க உதவப்போவதில்லையென இத்தீர்மானம் மூலம் 'சர்வதேசம்' நேரடியாக சொல்கின்றது. *


**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com



# வட மாகாண முதலமைச்சருக்கு மேதின வரலாறு தெரியாதா?

**ராஜன்**

**இ**ரு வருடங்களுக்கு முன்னர் முதலாளித்துவவாதிகளின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை யாழ்ப்பாணம் அழைத்து வந்து உலகத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர தினமான மேதினத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு 'கொண்டாடி' மேதினத்தை அவமரியாதை செய்ததை தமிழ் மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை. அந்த மேதினக் கூட்டத்தில் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து தமது வாழ்நாள் முழுவதும் எதிர்த்து வந்த இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக் கொடியை உயர்த்திப் பிடித்ததையும் தமிழ் மக்கள் அறிவர்.

இதே செய்கையை வேறொரு தமிழ் கட்சியோ அல்லது சாதாரண தமிழ் பொதுமக்களோ செய்திருந்தால், அவர்களை கூட்டமைப்பினர் 'துரோகிகள்' என முத்திரை குத்தியிருப்பர். 'பொடியள்' இருந்திருந்தால், இவர்கள் முத்திரை குத்தியவர்களை அவர்கள் 'போட்டு'த் தள்ளியும் இருப்பர். தமிழ் தலைமைகள் தமக்கொரு நீதி பிறருக்கொரு நீதி வைத்திருப்பதில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் முதல் வே.பிரபாகரன் வரைஅசகாய சூரர்கள்.

புலிகளின் யாழ்.மாவட்டத் தளபதியாக இருந்த கிட்டு, அப்பொழுது யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த கொத்தலாவலவுடன் கிரிக்கெட் விளையாடினார். அதேபோல இராணுவத்தினருடன் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களை கிரிக்கெட் விளையாட அனுமதித்ததிற்காக அக்கல்லூரியின் அதிபர் ஆனந்தராஜன் அவர்களைப் புலிகள் 'துரோகி' என்று சொல்லிச் சுட்டுக் கொன்றனர்.

இது ஒருபுறமிருக்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பு இம்முறை தனது மேதின 'கொண்டாட்டத்தை' சாவகச்சேரியில் நிகழ்த்தியிருக்கிறது. இத நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் திரு.சி.வி. விக்னேஸ்வரன் கலந்துகொண்டு 'சிறப்புரை' ஆற்றியிருக்கிறார். அதில் அவர் மேதினம் தோன்றிய சிக்காக்கோவில் தொழிலாளர் ஒற்றுமைப்பட்டுப் போராடியது போல, தமிழ் மக்களும் ஒற்றுமைப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

விக்னேஸ்வரன் தமிழர்களின் ஒற்றுமை குறித்து வலியுறுத்தியது சம்பந்தமாக எவருக்கும் எந்தவொரு ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் அவரது உரையைப் பிரசுரித்த யாழ்ப்பாண 'உதயன்' பத்திரிகையின் செய்தியின்படிதான் விக்னேஸ்வரன் அக்கூட்டத்தில் பேசியிருப்பாராக இருந்தால், அவருக்கு மேதினத்தின் வரலாறு தெரியாது என்ற முடிவுக்குத்தான் ஒருவர் வரவேண்டியிருக்கும்.

உதயன் செய்தியின்படி, சிக்காக்கோ தொழிலாளர்கள் 1886 மே 1ஆம் திகதி 8 மணி நேர வேலை நேரம் கேட்டு வேலைநிறுத்தம் செய்ததாக விக்னேஸ்வரன் பேசியிருக்கிறார். அது தவறு. அந்த ஆண்டு மே 4ஆம் திகதியே அவர்கள் வேலைநிறுதத்திலும், ஆர்ப்பாட்டத்தலும் ஈடுபட்டார்கள்.

இதுஒருபுறமிருக்க, விக்னேஸ்வரன் பேச்சின் மோசமான அம்சம் என்னவெனில், தொழிலாளர்களின் கோரிக்கை நியாயம் என்பதை உணர்ந்த முதலாளிகளும், ஆட்சியாளர்களும் 8 மணி நேர வேலை நேரத்துக்குச் சம்மதம் தெரிவித்ததாக அவர் கூறியிருப்பதுதான். இதன் அர்த்தம் உலகத் தொழிலாளி வர்க்கம் தனது 8 மணி நேர வேலை உரிமையைச் சமாதானமாகப் பெற்றார்கள் என்பதாகும். இது சுத்தமான பித்தலாட்டக் கதையாகவும், வரலாற்றைத் திட்டமிட்டுத் திரிப்பதாகவும் இருக்கின்றது.

உண்மையில் சிக்காக்கோவின் ஹேசந்தை சதுக்கத்தில் (Haymarket Square) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களில் சிலரைப் பொலிசார் சுட்டுப் படுகொலை செய்தனர் அதுமாத்திரமில்லாமல், அந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்ட சிலரை பொலிசார் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தி மரண தண்டனையும் பெற்றுக்

கொடுத்தனர். 8 மணி நேர வேலை உரிமை என்பது விக்னேஸ்வரன் சொல்வது போல முதலாளிகளும், ஆட்சியாளர்களும் தர்ம தேவதைகளாக மாறி தொழிலாளர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்த ஒன்றல்ல. அது பல உயிர்களைத் தியாகம் செய்து இரத்தம் சிந்திப் பெறப்பட்ட ஒன்றாகும்.

அதனால்தான் பின்னர் கார்ல்மார்க்சின் இணைத் தோழரான பிரெடரிக் எங்கெல்ஸ் காலத்தில் 1889இல் பிரான்சின் தலைநகரான பரீசில் கூடிய இரண்டாவது அகிலத்தின் முதலாவது காங்கிரசில் Raymond Lavigne என்பவர் 1890இல் சிக்காக்கோ சம்பவங்களை நினைவு கூர்ந்து உலகளாவிய ஆர்ப்பாட்டங்களை நடாத்த வேண்டும் என ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். பின்னர் 1891இல் கூடிய இரண்டாவது காங்கிரஸ் மே 1ஆம் திகதியை சர்வதேசத் தொழிலாளர் தினமாக நினைவுகூர வேண்டும் எனவும், சிவப்புக் கொடியைத் தொழிலாளி வர்க்கத்தின் கொடியாகவும் முறைப்படி பிரகடனம் செய்தது. மூவர்ணக் கொடியைப் பிடித்துக் கொண்டு, முதலாளித்துவத்தின் பச்சைக் கொடி (ஐ.தே.க) ஏந்தியவர்களுடன் மேதினம் கொண்டாடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்க்கு இது தெரியுமா என்பது கேள்வியே.

அதுமாத்திரமின்றி, இலங்கையிலும் 8 மணி நேர வேலைக்காக தொழிலாளர்கள் இடதுசாரித் தொழிற்சங்கங்களின் தலைமையில் போராடிய வரலாறும், மேதினத்துக்கு பொது விடுமறை விடுவதற்கு ஐ.தே.க அரசுகள் மறுத்த வரலாறும், பின்னர் 1956இல் பதவிக்கு வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சிதான் அத்தினத்தை இலங்கையில் பொது விடுமுறை தினமாக்கியது என்ற வரலாறும் விக்னேஸ்வரன் போன்றவர்களுக்கு நிச்சயம் தெரியாமல் போகாது.

அத்துடன் விக்னேஸ்வரன் சார்ந்திருக்கும் தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் 1965இல் சேர்ந்திருந்த டட்லி சேனநாயக்காவின ஐ.தே.க அரசு, 1966ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மேதின நிகழ்வு நடாத்துவதைத் தடை செய்தது என்பதையும், பின்னர் அதே அரசு 1969இல் நாடு முழுவதும் மேதினத்தைத் தடை செய்தது என்பதையும் முழு நாடுமே அறியும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிய புலிகள் வடக்கு கிழக்கில் தர்பார் நடாத்திய காலத்தில் தம்மைத் தவிர வேறு எவரும் மேதின நிகழ்வுகளை நடாத்தக்கூடாது என தடை விதித்திருந்ததையும் மக்கள் நன்கு அறிவர்.

வட மாகாண முதலமைச்சர் திரு.சி.வி.விக்னேஸ்வரன் மேதின வரலாறு பற்றி தப்பும் தவறுமாக தமிழ் மக்களுக்கு 'சிறப்புரை' ஆற்றுவதை விட, மேற்சொன்ன தமது சொந்தக் கட்சிகளின் வரலாறுகளை எடுத்துச் சொன்னார் என்றால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

*

# கனடாவில் மேதினம்



உலகம் முழுவதும் மே 1ஆம் திகதியை தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான தினமான மேதினமாக நினைவுகூரும் அதேவேளை, வட அமெரிக்காவில் உள்ள அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பிறிதொரு தினத்தில் – அதாவது செப்ரெம்பர் 1ஆம் திகதியை தொழிலாளர் தினம் (Labour Day) என்ற பெயரில் கொண்டாடுவது வழமை. அன்றைய தினம் பொது விடுமுறை தினமாகவும் இருக்கும்.

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் 8 மணி நேர வேலை நேரம் கேட்டுப் போராடிய தொழிலாளர்களை அமெரிக்க முதலாளி வர்க்கம் ஏவிய பொலிஸ்படை சுட்டுக் கொன்றதால் எழுந்த தொழிலாளி வர்க்கத்தின் ஆவேச உணர்வை உலகத் தொழிலாளி வர்க்கம் நினைவு கூர்வதால், வட அமெரிக்க நாடுகள் மே 1ஆம் திகதியைத் தமது நாட்டுத் தொழிலாளி வர்க்கம் நினைவு கூர்வதை விரும்பாததால், இந்த நாடுகள் மாற்று ஏற்பாட்டைச் செய்திருக்கலாம் என்ற அபிப்பிராயம் பரவலாக உண்டு.

ஆனால் கனடா ஒரு பல்கலாச்சார நாடாகவும், 200 வரையிலான உலக நாடுகளின் மக்கள் குடியேறி வாழ்வதனாலும், மே 1ஆம் திகதியிலும் சில அமைப்புகள் தமது தாய்நாடுகளின் வழமையையொட்டி மேதின நிகழ்வுகளை நடாத்துவது வழமை.

அந்த வகையில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வந்து கனடாவில் வாழும் மக்கள் சார்பாக உலகத் தொழிலாள வர்க்கத்தின் உரிமைப் போராட்ட தினமான மேதினத்தை முன்னிட்டு கனடாவின் ஸ்காபரோ நகரிலுள்ள சிவிக் சென்ரர் கூட்ட மண்டபத்தில் 2014 மே 2ஆம் திகதி ஒன்றுகூடலும் கலந்துரையாடலும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வை 'ஆக்கபூர்வ சிந்தனை மற்றும் செயல்பாடுகளுக்கான தமிழ் மக்கள் மையம்' ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்ச்சிக்கு மையத்தின் தலைவரும், மூத்த தொழிற்சங்க செயற்பாட்டாளருமான தோழர் சி.தருமராசன் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் மேதினத்தின் பாரம்பரியத்தையும், அதன் முக்கியத்துவத்தையும், அதன் காலவரையறையற்ற தேவையையும் எடுத்துரைத்தார்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலின் போது ச.சுப்பிரமணியம், மித்திரன், ரி.மகேஸ்வரராஜா, ஜேம்ஸ், சி.பாலசுப்பிரமணியம், சி.தர்சன், ஜோர்ஜ் குருசேவ், எஸ்.அரிகரன், எஸ்.நவரத்தினம், க.தவபாலன், ச.கதிரவேலு உட்பட பலர் கருத்துரை வழங்கினர். இன்றைய சர்வதேச அரசியல் சூழ்நிலை, இலங்கை – கனடா – சர்வதேச நாடுகளில் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக கருத்துரைத்தவர்கள் பல பயனுள்ள கருத்துகளை முன்வைத்தனர். *

# ரஸ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையில் 30 வருட இயற்கை எரிவாயு ஒப்பந்தம்!




உக்ரேன் பிரச்சினையில் ரஸ்யாவுக்கும் அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளுக்கும் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து, அமெரிக்காவும் கனடாவும் சில மேற்கு நாடுகளும் ரஸ்யா மீது பொருளாதாரத் தடை விதித்ததுடன், சில முக்கிய ரஸ்ய அதிகாரிகளின் சர்வதேசப் பயணங்களுக்கும் தடை விதித்தன. அதைத் தொடர்ந்து ரஸ்யாவும் பதிலடியாக கனடா போன்ற நாடுகளின் சில அதிகாரிகளுக்குப் பயணத் தடை விதித்துள்ளது.

ரஸ்யா மீதான பொருளாதாரத் தடையைப் பொறுத்தவரை அது எவ்வளவு தூரம் அந்த நாட்டைப் பாதிக்கும் என்பது கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது. ரஸ்யாவின் மொத்த தேசிய வருமானத்தில் மூன்றிலொரு பங்கு அது வெளிநாடுகளுக்கு, குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற இயற்கை வாயு மூலமே கிடைப்பதால், தமது பொருளாதாரத் தடை ரஸ்யாவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என மேற்கு நாடுகள் நம்புகின்றன.

ஆனால் போலந்து போன்ற ஒருசில நாடுகள் மட்டுமே ரஸ்யாவில் தங்கி இருக்காமல் கனடா போன்ற நாடுகளிலிருந்து எரிவாயுவைப் பெறுவதற்கு யோசித்து வருகின்ற போதிலும், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் ரஸ்யாவின் இயற்கை எரிவாயுவில் தங்கி நிற்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. அதனால் இப்போதைக்கு மேற்குலகின் பொருளாதாரத் தடையால் ரஸ்யாவுக்கு பெரிய பாதிப்புகள் எதுவும் ஏற்படாது எனக் கருதப்படுகிறது.

## துர்க்கேஸ்வரன்

இந்த நிலைமையில் அண்மையில் ரஸ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையில் 30 வருட கால இயற்கை எரிவாயு சம்பந்தமான ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தப்படி ரஸ்யா வருடந்தோறும் 38 பில்லியன் (Billion) கியூபிக் மீட்டர்கள் (Cubic Meters) அளவான இயற்கை எரிவாயுவை சீனாவுக்கு வழங்கும். இது ரஸ்யாவுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகப் பலராலும் நோக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் மூலம் ரஸ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு பலப்படுவதுடன், இரு நாடுகளும் அரசியல் - பொருளாதார ரீதியாகப் பல நன்மைகளையும் பெற வழிவகுக்கும். அத்துடன் இது உலகரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்தும் எனவும் கருதப்படுகிறது.

இதில் உள்ள ஒரு விசேடமான அம்சம் என்னவெனில், இந்த ஒப்பந்தத்துக்கான பணப் பரிவர்த்தனையை அமெரிக்காவின் டொலரில் அல்லாது தமது நாடுகளின் நாணயங்களில் செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே பிறிக்ஸ் நாடுகள் (BRICKS Countries – Brazil, Russia, India, China, South Africa) டொலருக்கு பதிலாக சர்வதேசப் பணப் பரிவர்த்தனைக்கு வேறொரு நாணயத்தை உருவாக்க வேண்டும் என ஆலோசித்து வரும் சூழ்நிலையில் ரஸ்யாவும் சீனாவும் எடுத்துள்ள முடிவு முக்கியத்துவம் பெறுகின்றது.

அதேநேரத்தில் இந்த ஒப்பந்தம் மூலம் சீனாவின் வேகமான பொருளாதார வளர்ச்சி (2020இல் அமெரிக்காவையும் தாண்டிச் செல்லும் என மதிப்பிடப்பட்டுள்ள) வேண்டி நிற்கும் அசுர எரிசக்திப் பசியையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

2013இல் சீனா நாளொன்றுக்கு 10.1 மில்லியன் (Million) பீப்பாய்கள் எண்ணெயை நுகர்வு செய்துள்ளது. இது உலகத்தின் மொத்த எண்ணெய் பாவனையில் ஒன்பதில் ஒரு பங்காகும். அதேநேரத்தில் சீனா உற்பத்தி செய்த எண்ணெயின் அளவு 4.2 மில்லியன் பீப்பாய்கள் மட்டுமே. அதனால் சீனா தனது மேலதிக தேவைக்கு இறக்குமதியிலேயே தங்கியுள்ளது.

சீனா தான் இறக்குமதி செய்யும் எண்ணெயில் பெரும்பகுதியை

பேர்சியன் வளைகுடா (Persian Gulf) நாடுகளிலிருந்தே பெறுகிறது. அந்த எண்ணெய் ஹோமுஸ் நீரிணையின் (Strait of Hormuz) மூலமே சீனாவுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அந்தப் பகுதி அமெரிக்கக் கடற்படையின் பாதுகாப்பின் கீழ் இருப்பதால் சீனாவுக்கு அது ஒரு சங்கடமான விடயம்.

சீனா ஈரானிடமிருந்தும் தினசரி அரை மில்லியன் பீப்பாய்கள் எண்ணெயை இறக்குமதி செய்கின்றது. ஆனால் ஈரான் மீது அமெரிக்காவின் பொருளாதாரத் தடை இருப்பதால் அதில் சில சிக்கல்கள் உள்ளன.

இதுதவிர ஆபிரிக்காவில் லிபியா, சூடான், தென் சூடான், அங்கோலா போன்ற நாடுகளிலிருந்தும் சீனா எண்ணெய் இறக்குமதி செய்கின்றது. அதேபோல மத்திய கிழக்கில் ஓமன், ஐக்கிய அரபு இராஜ்சியம் போன்ற நாடுகளிலிருந்தும் எண்ணெய் பெறுகின்றது.

ஈராக்கைப் பொறுத்தவரையிலும் கூட சீனா மிகப்பெரும் எண்ணெய் வாடிக்கையாளராக இருக்கின்றது. சீன எண்ணெய் கம்பனிகள் ஈராக்கின் சில பெரிய எண்ணெய் வயல்களில் பாரிய அளவில் முதலீடுகள் செய்துள்ளன.

பாரம்பரியமாக அமெரிக்கா செல்வாக்குச் செலுத்தி வரும் தென் அமெரிக்காவிலும் சீனாவின் எண்ணெய் கம்பனிகள் சமீப வருடங்களில் அதிக ஈடுபாட்டுடன் செயல்படுகின்றன. குறிப்பாக இடதுசாரிக் கொள்கைகளைப் பின்பற்றும் வெனிசூலா (உலகின் முன்னணி 5 எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஒன்று), ஈகுவடோர் என்பனவற்றுடன் சீனாவுக்கு நெருக்கமான தொடர்புகள் உண்டு.

கடந்த 6 வருடங்களாக வெனிசூலாவிடமிருந்து சீனா தினசரி 600,000 பீப்பாய்கள் எண்ணெயை இறக்குமதி செய்து வருகின்றது. ஈகுவடோரின் எண்ணெயில் பெரும்பகுதியை அமெரிக்கா உட்பட பல நாடுகளுக்கு சீனா விற்பனை செய்தும் வருகின்றது.

அதேநேரத்தில் சீனா தனது நாட்டுக்குள்ளும் தனது கடற்பிராந்தியத்திலும் எண்ணெய் அகழ்வு வேலைகளில் தீவிர முனைப்புக் காட்டி வருகின்றது. சமீபத்தில் தென் சீனக்கடலில் சீனாவுக்கும் வியட்நாமுக்கும் இடையில் சர்ச்சையில் இருந்த தீவுகள் கொண்ட கடல் பகுதியில் சீனா எண்ணெய் அகழ்வைத் தொடங்கியது. இதற்கு வியட்நாம் கடுமையான ஆட்சேபனை தெரிவித்ததுடன், வியட்நாமில் மக்கள் வீதிகளில் இறங்கி சீனாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டங்களின் போது அங்கு தொழில்புரிந்து வந்த சில சீனப் பிரஜைகளும் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து சீனா கப்பல்களை அனுப்பித் தனது பிரஜைகளைத் திருப்பி அழைத்தது. இந்தச் சம்பவமும் சீனாவின் அதிகரித்து வரும் எண்ணெய் தேவையின் வெளிப்பாடாகவே பார்க்கப்படுகிறது.

இந்த நிலைமையில் தற்போது ரஸ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள 30 வருட இயற்கை எரிவாயு ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது. ஒரு பக்கத்தில் இந்த உடன்படிக்கை ரஸ்யாவுக்கு எதிரான மேற்குலகின் பொருளாதாரத் தடை என்ற அச்சுறுத்தலை நீர்த்துக்போக வைக்கக்கூடியது. மறுபக்கத்தில் சீனாவின் அதிகரித்து வரும் எரிசக்தித் தேவையை இது ஓரளவு ஈடுசெய்வதுடன், நிலக்கரிப் பாவனையாலும், அனல் மின்சாரத்தாலும் மாசடைந்துள்ள சீனாவின் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் உதவும்.

அதிகரித்து வரும் ரஸ்ய - சீன உறவும், அதில் இந்தியாவையும் வேறு சில சக்தி வாய்ந்த நாடுகளைச் சேர்க்க எடுக்கும் முயற்சிகளும், எதிர்காலத்தில் உலகின் வல்லரசுச் சம நிலையில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது. *

# இந்தியா.. இந்தியா.. இந்தியா!?

இந்தியாவின் மொத்த சனத்தொகை: 122 கோடி (உலக சனத்தொகையில் 17,5%)

2014 தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானோர்: 814 மில்லியன் (81 கோடி)

புதிதாக வாக்களிக்க தகுதி பெற்றோர்: 150 மில்லியன் (15 கோடி)

இவர்களின் வயது: 18 – 23 வரை

சனத்தொகையில் 35 வயதுக்கு உட்பட்டோர்: 2/3 பங்கு

சனத்தொகையில் 25 வயதுக்கு உட்பட்டோர்: 1/2 பங்கு

இந்தியாவின் மத்திம வயது: 29 வருடங்கள்

சீனாவின் மத்திம வயது: 37 வருடங்கள்

Prathan என்ற இலாப நோக்கற்ற கல்வி பரிந்துரைக்குழுவின் தகவல்களின்படி:

- இந்தியாவில் 7 வயதுடையவர்களில் அரைவாசிப்பேருக்கு எழுத்துகளைப் புரிந்துகொள்ள முடியாது.
- 10 வயதுள்ளவர்களில் 5 பேர்களில் ஒருவருக்கு வாசிக்கத் தெரியாது.
- உற்பத்தித்துறையில் போதி வேலைவாய்ப்புகள் இல்லாதபடியால், 2012இல் இருந்ததைவிடக் கூடுதலான மக்கள் 2019இல் விவசாயத்துறையில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இவர்களும் சேர்ந்துதான் இந்திய ஜனநாயகம் தீர்மானிக்கப்படுகிறது!** *

ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சியின் 43ஆவது ஆண்டு நினைவாக ஒரு கண்ணோட்டம்: பகுதி – 2

# ஜே.வி.பி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாமல் போனது ஏன்?

**ஜே.**வி.பிக்கு ஆரம்ப காலங்களில் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு ஏற்பட்ட அளவுக்கு தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் செல்வாக்கு ஏற்படாமல் விட்டமைக்குக் காரணம் அது ஒரு சிங்கள குறுந்தேசிய இயக்கம் என்பதனால் மட்டும் அல்ல. ஏனெனில் ஜே.வி.பியின் இனவாத முகம் 1971 ஏப்ரல் கிளர்ச்சிக்கு முன்னர் தமிழ் மக்கள் மத்தியில் பெரிதாகத் தெரிந்திருக்கவில்லை.

**சுப்பராஜன்**

ஆனாலும் அது நடாத்திய 5 வகுப்புகளில் ஒன்றான இந்திய விஸ்தரிப்புவாதம் பற்றிய வகுப்பு இந்திய வம்சாவழி மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இருந்ததினால், அதன் இனவாத முகம் மலையகப் பகுதிகளில் ஓரளவு அம்பலப்பட்டு இருந்தது.

மற்றும்படி 1971இற்கு முன்னர் ஜே.வி.பியின் இனவாத முகம் வெளிப்படாமல் இருந்ததினாலும், 1972இல் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் புதிய குடியரசு அரசியல் சாசனம் வரும்வரை தமிழ் இனவாத சக்திகளின் போராட்டம் தீவிரமடையாமல் இருந்ததினாலும், தமிழ் மக்கள் மத்தியில் ஜே.வி.பி பற்றி பெரிதான எதிர்ப்புணர்வு ஏதும் இருக்கவில்லை. அப்படியானால் ஏன் சிங்கள மக்கள் மத்தியில் ஜே.வி.பி செல்வாக்குப் பெற்ற மாதிரி தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறவில்லை என்ற கேள்வி பலருக்கும் எழலாம்.

அதற்குக் காரணம் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி என அழைக்கப்படும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிதான். ஏனெனில் ஜே.வி.பியின் ஸ்தாபகர் ரோகண விஜேவீர அந்தக் கட்சியுடன் முன்னர் இருந்து வெளியேறிச் சென்றவர் என்ற வகையிலும், அக்கட்சியின் சிங்களப் பகுதி வாலிபர் அணி சக்திகளை உடைத்துச் கொண்டு போனவர் என்ற வகையிலும், ஜே.வி.பி மீது அக்கட்சியினருக்கு தீவிரமான வெறுப்பும் கோபமும் இருந்தது.

எனவே அவர்கள் ஜே.வி.பி பற்றி தத்துவார்த்த ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தீவிரமான எதிர்ப்பிரச்சாரங்களை மேற்கொண்டனர். தத்துவார்த்தரீதியாக ஜே.வி.பி ஒரு உண்மையான மார்க்சிச – லெனினிச கட்சி அல்ல, அது குட்டி முதலாளித்துவ இடதுசாரி சிறுபிள்ளைவாதக் கட்சி என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டனர். அத்துடன் அவர்கள் புரட்சியின் தலைமைச் சக்தியான தொழிலாள வர்க்கத்தையோ, அதன் நேச சக்தியான விவசாயிகளையோ அணிதிரட்டாமல், குட்டி முதலாளித்துவக் குணாம்சம் கொண்ட இளைஞர்களை மட்டுமே அணி திரட்டுகின்றனர் எனப் பிரச்சாரம் செய்தனர்.

அரசியல் ரீதியாக, இந்திய வம்சாவழி மலையகத் தோட்டத் தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்புவாதத்தின கைக்கூலிகள் எனப் பிரச்சாரம் செய்வதும், புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான நா.சண்முகதாசன் ஒரு தமிழராக இருப்பதால் அவர் தலைமையில் இலங்கையில் புரட்சி செய்வது சாத்தியமில்லை என ஜே.வி.பி செய்யும் பிரச்சாரமும் இனவாத அடிப்படையைக் கொண்டது என, புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி பிரச்சாரம் செய்தது.

அந்தப் பிரச்சாரம் வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதற்குக் காரணம் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் தொழிலாளர் – விவசாயிகள் மத்தியிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும், மத்தியதர வர்க்க அரச ஊழியர்கள் மத்தியிலும் செய்த வேலைகள் காரணமாக அக்கட்சிக்கு மேற்குறித்த பகுதிகளில் கணிசமான செல்வாக்கு ஏற்பட்டிருந்தது.

குறிப்பாக 1960களில் அக்கட்சி தலைமைதாங்கி நடாத்திய தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேச, தேநீர்க்கடைப் பிரதேச, பொது இடங்களில் சமத்துவத்துக்கான போராட்டமும், அதன் வெற்றியும் வடக்கில் அக்கட்சிக்கு பலமானதொரு அடித்தளத்தை உருவாக்கியிருந்தது. (இந்தக் கட்டுரையாளரும் இன்னொரு தோழரும் ஒருமுறை வவுனியா ஈரற்பெரியகுளத்தில் அப்பகுதி ஜே.வி.பி பொறுப்பாளர் காமினி என்பவரை தற்செயலாகச் சந்தித்து உரையாடிய போது, எங்களை இந்திய வம்சாவழித் தமிழர்கள் என்று நினைத்து வடபகுதியில் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தை தமது இயக்கம்தான் நடாத்தியது என எம்மிடம் பொய் கூறினார். அந்தக் காமினியும் அவரது பல சகாக்களும் 1971 ஏப்ரல் கிளர்ச்சியில்

மரணித்துவிட்டதாகப் பின்னர் அறிந்தோம்)

எனவே வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் ஜே.வி.பி கால் ஊன்றாதபடி பார்த்துக் கொண்டதில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம் தீர்க்கமான ஒன்றாகும். அதன் பின்னர் பிற்காலங்களில் ஜே.வி.பியின் இனவாத முகம் தெளிவாக வெளித்தெரிந்த பின்னர் தமிழ் மக்கள் அதை நிராகரித்தது பின்னைய காலத்துக்கு உரிய விடயமாகும்.

ஆனால் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி ஜே.வி.பிக்கு எதிராக சிங்களப் பகுதிகளில் மேற்கொண்ட பிரச்சாரம் ஏன் வெற்றியீட்டவில்லை என்ற கேள்வி பலருக்கு எழலாம். அதற்கு பல காரணங்கள் உண்டு.


இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி 1943 யூலை மாதம் 03ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. அன்றிலிருந்து 1964இல் அக்கட்சி சோவியத் சார்பு – சீனசார்பு என பிளவுபடும் வரை கட்சி பலமாகவே இருந்தது. 1964இல் கட்சி பிளவுபட்ட போது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் சோவியத் சார்பு அணியிலேயே இருந்தனர். அதேநேரத்தில் கட்சியின் பலமான தொழிற்சங்க மத்திய ஸ்தானமான இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனமும், வாலிபர் அணியில் பெரும் பகுதியும், விசுவாசமான கட்சி உறுப்பினர்களும் சீனசார்பு அணியிலேயே இருந்தனர்.

அதன் காரணமாக இந்த இரண்டு பிரிவுகளில் எதனுடன் தொடர்புகளைப் பேணுவது என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் விவாதிக்கும் அளவுக்கு இரண்டு அணிகளுமே சமமான பலத்தைப் பேணின. ஆனால் கடைசியில் சுதந்திரக் கட்சி சோவியத் சார்பு அணியையே உத்தியோகபூர்வ கம்யூனிஸ்ட் கட்சியாக அங்கீகரித்து தொடர்பைப் பேணியது. அதற்குச் சில காரணங்கள் இருந்தன.

மார்க்சிச – லெனினிச சிந்தாந்தப்படி முதலாளித்துவப் பாராளுமன்றத் தேர்தல்களின் மூலமாக அல்லாது ஆயுதப் புரட்சியின் மூலமே ஒரு நாட்டில் சோசலிச அரசொன்றை ஸ்தாபிக்க முடியும் என்பதுதான் அடிப்படை உண்மை என்ற போதிலும், அதற்கான சூழல் கனியும்வரை முதலாளித்துவம் வழங்கியுள்ள பாராளுமன்ற ஜனநாயக வழிமுறைகளைப் பயன்படுத்தி கட்சியை வெகுஜனங்கள் மத்தியில் வளர்க்க முடியும் என்ற நிலைமை பல நாடுகளில் உண்டு. இலங்கை போன்ற பாராளுமன்ற ஜனநாயகத்தில் ஊறிய நாடுகளுக்கு இது மிகவும் பொருத்தமானதும் கூட.

ஆரம்பத்தில் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி 1965 பொதுத்தேர்தலின் போது இந்த சரியான வழிமுறையைப் பின்பற்றியது. கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்த நா.சண்முகதாசன் கொழும்பு மத்திய தொகுதியிலும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான ஆரியவன்ச குணசேகர வவுனியா தொகுதியிலும், டாக்டர் சு.வே.சீனிவாசகம் காங்கேசன்துறைத் தொகுதியிலும் போட்டியிட்டனர். கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிட்ட சண்முகதாசன் அது மூன்று அங்கத்தவர் கொண்ட (அதாவது ஒருவருக்கு 3 வாக்குகள்) தொகுதியாக இருந்தும் பெற்ற மொத்த வாக்குகள் இரண்டாயிரத்துக்குச் சற்றுக் கூடுதலானதுதான்!

அந்தத் தோல்வியின் பின்னர் திராட்சைப் பழத்துக்கு ஆசைப்பட்டு எட்டி எட்டிப் பார்த்தும் பறிக்க முடியாத நிலையில் நரி ஒன்று 'சீ..சீ.. இந்தப்பழம் புளிக்கும்' என வெறுத்து ஒதுங்கியது போல, சண்முகதாசன் 'பாராளுமன்ற தேர்தலை ஒரு மேடையாகப் பயன்படுத்தும்' தனது முன்னைய நிலையை முற்றுமுழுதாக மாற்றி, ஆயுதப்போராட்டமே ஒரே வழி என்ற தப்பித்தல்வாதக் கருத்தை கட்சிக்குள் திணித்து அதில் வெற்றியும் பெற்றார். அதன் காரணமாக பாராளுமன்ற ஜனநாயகத்தில் நன்கு ஊறியிருந்த சிங்கள வெகுஜனங்கள் மத்தியில் கட்சியின் தொடர்புகள் அறுந்து போயின. அதேநேரத்தில் சோவியத் சார்புக் கட்சி அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டது.



**எஸ்.டி.பண்டாரநாயக்க**

சீனசார்பு கட்சி சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற முடியாமல் போனதற்கு இன்னொரு காரணம், கட்சியிலிருந்த வெகுஜனச் செல்வாக்கும், செயல்திறனும் கொண்ட தலைவர்களை சண்முகதாசன் காலத்துக்காலம் திட்டமிட்டு கட்சியிலிருந்து வெளியேற்றியதாகும். உதாரணமாக கட்சி பிரிந்த பின் முதலாவது பொதுச்செயலாளராக இருந்தவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மிகச்சிறந்த மேடைப் பேச்சாளருமான பிரேம்லால் குமாரசிறி, திருமதி தேஜா குணவர்த்தன, கட்சிப் பத்திரிகையான 'கம்கறுவ' (தமிழில் தொழிலாளி)வின் ஆசிரியரும், மத்திய குழு உறுப்பினரும், கண்டி மாவட்டச் செயலாளருமான காமினி யாப்பா (விமல் ரணசிங்க), முன்னாள் கம்பஹா தொகுதிப் பாராளுமன்ற

உறுப்பினரான, அண்மையில் மறைந்த **எஸ்.டி. பண்டாரநாயக்க** என்போர் சண்முகதாசனால் திட்டமிட்ட முறையில் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டவர்களாவர்.

சிங்கள மக்கள் மத்தியில் கட்சி செல்வாக்குப் பெறத் தவறியதற்கு மற்றுமொரு முக்கிய காரணம், சண்முகதாசன் சிறீலங்கா சுதந்திரக் கட்சி சம்பந்தமாக எடுத்த நிலைப்பாடாகும்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க 1952இல் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி வந்து தனது சொந்தக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தது ஒரு தனிப்பட்ட விவகாரம் அல்ல. அது நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கையின் முதலாளி வர்க்கத்தில் ஏற்பட்ட பிளவை எடுத்துக் காட்டியது.

ஐ.தே.க எப்பொழுதும் ஏகாதிபத்தியத்துக்குச் சார்பாக இருந்ததுடன், உள்நாட்டிலும் விதேசிய சார்பு தரகுப் பெரு முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. ஆனால் பண்டாரநாயக்கவின் சிறீ.ல.சு.கட்சி தேசப்பற்றுள்ள தேசிய முதலாளித்துவ சக்திகள், தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவகள், கலைஞர்கள், மத குருமார்கள், சுதேச வைத்தியர்கள் மற்றும் நலிந்த பிரிவினர் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. அதன் காரணமாகவே 1956இல் ஆட்சியைக் கைப்பற்றிய பண்டாரநாயக்கவும் சரி, அவர் 1959இல் பிற்போக்குசக்திகளால் படுகொலை செய்யப்பட்ட பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசுகளுக்குத் தலைமைதாங்கிய அவரது மனைவி சிறீமாவோவும் சரி, பல ஏகாதிபத்திய விரோத, பெரு முதலாளித்துவ விரோத, நிலப்பிரபுத்துவ விரோத நடவடிக்கைகளைத் துணிந்து எடுத்தனர்.

சிறீ.ல.சு.கட்சியின் தேசிய முதலாளித்துவத் தன்மை கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கப்படும் புரட்சியின் முதலாவது கட்டமான புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அதனை ஒரு நேச சக்தியாக இனம் காட்டியது. அதனால்தான் அதன் குறுகிய சிங்களத் தேசியவாதத் தன்மை ஒரு பக்கம் இருந்தாலும், இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சியையும், லங்கா சமசமாஜக் கட்சியையும் அதனுடன் நேச உறவு கொள்ள வைத்தது.

ஆனால் ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி எடுத்திருந்த இந்த நிலைப்பாட்டை தலைகீழாக மாற்றிய சண்முகதாசன், ஏகாதிபத்திய சார்பு கட்சியான ஐ.தே.கவையும், தேசிய சார்புக் கட்சியான சிறீ.ல.சு.கட்சியையும் ஒரே தராசில் போட்டு, இரண்டு கட்சிகளும் முதலாளித்துவத்தின் இரண்டு பிரிவுகள் என்றும், ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்றும் முடிவு செய்தார். அதன் காரணமாக புரட்சிகர கட்யூனிஸ்ட் கட்சி சிறீ.ல.சு.கட்சிக்குப் பின்னால் அணிதிரண்டிருந்த லட்சோப லட்சம் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு கொண்ட சிங்கள மக்களின் தொடர்பை இழந்தது.

இன்னொரு விடயமும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறாமல் போனதற்குக் காரணம் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதாவது கட்சியின் தலைமைத்துவ நபரான சண்முகதாசன் ஒரு தமிழர் என்ற காரணி. நாம் எவ்வளவுதான் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துவம் பற்றி உரக்கப் பேசினாலும், பின்தங்கிய ஆசிய சமூகங்களில் இன, மொழி, மத, சாதி, பாலின, பிராந்திய வேறுபாடுகள் பலமான ஆதிக்கத்தைக் கொண்டிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. அதுவும் பிரித்தானிய காலனித்துவவாதிகளால் இன முரண்பாடு திட்டமிட்ட முறையில் விதைக்கப்பட்டு, அதன் காரணமாக இனவன்செயல்களைக் கண்ட இலங்கையில் இனவாதம் பலமாக வேரூன்றியுள்ளதை எவரும் மறுக்க முடியாது. அதன் காரணமாக சண்முகதாசன் என்ற தமிழர் ஒருவரின் தலைமையை ஏகப்பெரும்பான்மையான சிங்கள மக்கள் ஏற்கும் சூழல் நிலவவில்லை.

அத்துடன் எப்படி ரோகண விஜேவீர சிங்கள இளைஞர்களைத் தன்பக்கம் இழுப்பதற்கு சண்முகதாசன் ஒரு தமிழர் என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டாரோ, அக்கீழ்த்தரமான யுக்தியை கம்யூனிஸ்ட் பிளவுபட்ட பின்னர் சோவியத் சார்பு அணியினரும் மேற்கொண்டனர். அந்த அணியின் சில தலைவர்கள் பகிரங்கக் கூட்டங்களில் பேசும்போது கூட சண்முகதாசனை விமர்ச்சிக்கும் போது, வெறுமனே சண்முகதாசன் என்று சொன்னால் அதைச் சிங்கள மக்கள் 'சண்முகதாச' என்ற சிங்களவர் என்று தவறாக நினைத்து விடுவார்களோ என்று கருதி நாகலிங்கம் சண்முகதாசன் என்று அவரது முழுப்பெயரையும் சொல்லி அவர் ஒரு தமிழர் என மறைமுகமாகச் சுட்டிக்காட்டி வந்துள்ளனர்.

இப்படியான பல்வேறு காரணிகளால் சிங்கள மக்கள் மத்தியில் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைக்கப்பட்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்குப் பெறமுடியாமல் போய்விட்டது.

ஆனால் அன்றும் சரி, இன்றும் சரி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஜே.வி.பி செல்வாக்குப் பெற முடியாமல் போவதற்காக புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சி நடாத்திய பிரச்சார இயக்கத்தில் சண்முகதாசனின் பங்களிப்பையும் எவரும் குறைத்து மதிப்பீட்டுவிட முடியாது.

(அடுத்த இதழில் (யூன்), தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஜே.வி.பி செல்வாக்குப் பெற முடியாமல் இருந்த போதிலும், 1971இல் அந்த இயக்கம் நடாத்திய ஆயுதக் கிளர்ச்சியை சாட்டாக வைத்து பொலிசார் எப்படி தமிழ் மார்க்சிச – லெனினிச சக்திகளை வேட்டையாட அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த முயன்றனர் என்ற விபரத்தைப் பார்ப்போம்)

# அண்மையில் காலமான அறிஞர் அ.முகம்மது சமீம் அவர்களின் பார்வையில் முற்போக்கு இலக்கியம்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரும், தற்போது அதற்குப் பிரதியீடாக செயற்பட்டு வரும் இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தின் ஸ்தாபகர்களில் ஒருவருமான அறிஞர் அ.முகம்மது சமீம் அவர்கள் அண்மையில் காலமாகிவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ் இலக்கியப் பரப்பில் முஸ்லீம் சமூகத்தில் இருந்து பூத்த முற்போக்கு இலக்கிய மலர்களான காலஞ்சென்ற சுபைர் இளங்கீரன், எச்.எம்.பி.மொகிதீன், மருதூர் கொத்தன், ஹனீபா (மருதூர்கனி) போன்றோரின் வரிசையில் வந்தவர் சமீம் அவர்கள்.

அதுமட்டுமின்றி அவர் புகழ்பெற்ற கல்லூரி அதிபராகவும், கல்விப் பணிப்பாளராகவும் செவ்வனே பணியாற்றியவர். பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் பல்கலைக்கழக சகா.

அவருடைய மறைவுக்கு 'வானவில்' தனது இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவிப்பதுடன், இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் தொகுத்து வெளியீட்ட, "எனது இலக்கியத் தேடல்" என்ற அவரது கட்டுரைத் தொகுப்புக்கு அவர் எழுதிய முன்னுரையிலிருந்து சில முக்கிய பகுதிகளையும் மறுபிரசுரம் செய்கின்றது.

---



அறிஞர் அ.முகம்மது சமீம்

**எ**ன்னுடைய விமர்சனங்கள் மார்க்சியக் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டவை. மனித வரலாற்றை ஒரு வர்க்கப் போராட்டமாகக் கண்டார் கார்ல் மார்க்ஸ். ஆரம்பத்தில் சுதந்திரமாக வாழ்ந்த மனிதன், காலப்போக்கில் உற்பத்தி பெருகியதனால் அவனது உறவுகளிலும் மாற்றம் ஏற்பட்டது. உழைக்கும் வர்க்கம் என்றும், இவ்வுழைப்பின் பயனை அனுபவிக்கும் வர்க்கம் என்றும் பிரிந்தது. ஆளும் வர்க்கம் என்றும், ஆளப்படும் வர்க்கம் என்றும் இரு கூறுகளாக மனித சமுதாயம் பிரிந்தது. மனித வரலாறு என்பது வர்க்கப் போராட்டத்தின் வரலாறு என்று கார்ல் மார்க்ஸ் வரலாற்றைப் புதிய கண்ணோட்டத்தில் பார்த்தார். வர்க்கப் போராட்டம் என்ற கருத்து மார்க்சியத்தின் ஆதாரமான கோட்பாடுகளில் ஒன்று.

மார்க்சியத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றுதான் பொருள்முதல்வாதம். ஆன்மீகத்தை முற்றுமுழுதாக மார்க்சியர்கள் மறுக்கவில்லை. ஆன்மீகக் கருத்துக்கள் மனித வரலாற்றுக்கு ஒரு காலகட்டத்தில் உதவின. ஆனால் மனிதனை அடக்குவதற்கும், அவனுடைய சக்திகளைக் குறைப்பதற்கும் இக்கருத்துக்கள் பயன்பட்டன.

ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதனின் போராட்டத்தைச் சித்தரிப்பதுதான் இலக்கியம். இலக்கியத்தை மார்க்சியக் கண்ணோட்டத்தில் பார்த்தவர்களில் ஒருவர்தான் பேராசிரியர் கைலாசபதி. ''பேராசிரியர் கைலாசபதி அவர்களின் வருகையின் மூலம் தமிழ் இலக்கிய ஆய்வில் மார்க்சிய நெறி உறுதிப்பட்டது'' என்று கூறுகிறார் ஞானி. மேலும் அவர், ''இன்று தமிழாய்வுத்துறையில் மார்க்சியமும் ஒரு ஆய்வு நெறி என்ற முறையில் கேள்விக்கு இடமற்றதாகத் திகழ்கிறது'' என்று கூறுகிறார்.

இலக்கியம் சமூகத்தோடு தொடர்புடையது. சமூகத்தைப் பிரதிபலிப்பதுதான் இலக்கியம். இலக்கியம் யாருக்காக? என்ற கேள்வி அடுத்து எழுகின்றது. இலக்கியம் யாருக்காக என்பதில் முற்போக்காளர்கள் மத்தியில் கருத்து வேற்றுமை இல்லை. "இலக்கியம் இன்ப நுகர்ச்சியில் தெவிட்டி நிற்கும் ஒரு சீமாட்டிக்கோ, சலிப்புற்றிருக்கும் மேல்தட்டு பத்தாயிரம் பேருக்கோ எழுதப்படுவது அல்ல. இது கோடிக்கணக்கான பாட்டாளி மக்களின் கலை" என்று கூறுகிறார் நம்பூதிரிபாட் தனது "மார்க்சியமும் இலக்கியமும்" என்ற நூலில்.

மக்கள் இலக்கியத்தைப் பற்றி ப.ஜீவானந்தம் கூறும்போது, "இத்தகைய இலக்கியமும் கலையும் மக்களுடைய நல உரிமைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இவை வெகுஜனத்தன்மை வாய்ந்தவையாக, யதார்த்த கண் படைத்தவையாக, தேசியத்தன்மையுடையனவாக, அதேபொழுதில் சர்வதேசியத்தன்மை உடையனவாக இருக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

இலக்கியத்தை "நல்ல இலக்கியம்", "நசிவு இலக்கியம்" என்று இரு பிரிவுகளாக ஜீவானந்தம் பிரிக்கிறார். "நல்ல இலக்கியம் மனித நேர்மையையும், சிறந்த தீர்க்கதரிசனத்தையும் கொண்ட இலக்கியம்" என்றும், "சிதைந்து சீரழிந்து வருகின்ற சமுதாயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இலக்கியம் நசிவு இலக்கியம்" என்றும் ஜீவா விளக்கம் கூறுகின்றார்.

**"நமக்குத் தொழில் கவிதை**
**நாட்டுக்குழைத்தல்**
**இமைப்பொழுதும்**
**சோராதிருத்தல்"**

என்று மகாகவி பாரதி பாடும்போது நல்ல இலக்கியத்திற்கு உதாரணமாக விளங்குகின்றார்.

இந்த நல்ல இலக்கித்தைப் படைப்பவன்தான் முற்போக்கு எழுத்தாளன். முற்போக்கு எழுத்தாளர்கள் சேர்ந்து, 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' என்ற ஒரு சங்கத்தை 1930ஆம் ஆண்டு லக்னோவில் நிறுவினார்கள். இக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய வங்க எழுத்தாளர் பிரேம்சந்த், " விமர்சன ஆர்வ எழுச்சியைத் தூண்டாத, நமது உணர்வை விழிப்புறச் செய்யாத, உறுதியான மனவலியோடு கொடிய வாழ்க்கையின் யதார்த்தத்தை எதிர்கொள்வதற்கான வலிமை தராத இலக்கியத்தால் இன்றைக்கு நமக்கு எவ்விதப் பயனுமில்லை. அதை ஒரு இலக்கியமாகவே அழைக்கக்கூடாது" என்று முழங்கினார். "அடங்கிப் போதல், செயலின்மை, பகுத்தறிவின்மை ஆகியவற்றுக்கு இழுத்துச் செல்லும் அனைத்தையும் நாம் பிற்போக்கு என்று ஒதுக்கித் தள்ளுகிறோம்" என்று சங்கத்தின் அறிக்கை கூறியது.

முற்போக்கு சிந்தனையாளர்கள் பொதுவுடைமை இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள். புதுமைப்பித்தன், வ.ரா, சண்முகசுந்தரம் போன்றவர்கள் பொதுவுடைமைக் கட்சிக்கு வெளியே நின்று முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பினார்கள். ஐம்பதுகளில் முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட சஞ்சிகைகள் வெளிவரத் தொடங்கின. விடிவெள்ளி (விஜயபாஸ்கரன்), வாரம் (குயிலன்), சாந்தி (தொ.மு.சி.ரகுநாதன், சரஸ்வதி (விஜயபாஸ்கரன்), மனிதன் (விந்தன்) என்பன வெளிவந்தன. இச்சஞ்சிகைகளில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களும் எழுதத் தொடங்கினர். இலங்கையிலும் ஐம்பதுகளில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தோன்றுவதற்கும் இவர்கள் காரணமாக இருந்தனர்.

முற்போக்கு எழுத்தாளர்களுடைய படைப்புகள் மக்கள் சார்ந்ததாக இருந்தன. செ.கணேசலிங்கன், கே.டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், என்.கே.ரகுநாதன், இளங்கீரன் போன்றவர்களுடைய கதைகளும், நாவல்களும் சமூகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. முற்போக்கு இலக்கியம் மக்களின் தேவை என்று வாதிட்ட ஓர் அமெரிக்க விமர்சகன், "சிறப்புமிக்க கலை எப்பொழுதும் மக்களின் கலையாகவே இருந்து வந்திருக்கிறது" என்று கூறுகிறான்.

"கலை மேலும் மேலும் மக்களையும், மக்கள் மேலும் மேலும் கலையையும் நெருங்கி வர வேண்டும்" என்று வலியுறுத்தும் லெனின், கலை மக்களுக்கு அளிக்கக்கூடிய பயன் குறித்தும் விளக்குகிறார். "கலையானது மக்களுக்கு உரியதாகும். உழைப்பாளி மக்களிடையே அதன் வேர்கள் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டும். அது அவர்களுடைய சிந்தனையையும் சித்தத்தையும் ஒன்றிணைத்திட வேண்டும், உயர்த்திட வேண்டும் (லெனின், "கலாச்சாரமும் கலாச்சாரப் புரட்சியும்").

இதே கருத்தில் சீனக் கம்யூனிஸ்ட் தலைவர் மாஓசேதுங் கூறும்போது, "தேசத்தை ஒன்றுபடுத்தி எதிரியை முறியடிக்கும் கடமை" கலைக்கு இருப்பதாகக் கூறகின்றார். முற்போக்கு இலக்கியத்தின் வரலாற்றை ச.மாடசாமி தன்னுடைய "பொதுவுடைமை இலக்கியம்" என்ற நூலில் மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கின்றார். "ஒரு வர்க்கப் பார்வையோடு மார்க்சிய வெளிச்சத்தில் எழுத்தாளர்கள் எழுதத் தொடங்கிய காலம் 1930ஆம் ஆண்டுகளையொட்டியே விடுதலைக்கு முற்பட்ட ஓர் இருபதாண்டு காலத்தை முற்போக்கு இலக்கியத்தின் முதல் காலகட்டம் எனலாம். சுயமுயற்சி குறைவாகவும், சோவியத் இலக்கியத் தாக்கம் மிகுதியாகவும் இருந்த காலகட்டம் இது.

1950 — 1990ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தை முற்போக்கு இலக்கியத்தின் இரண்டாவது காலகட்டம் எனலாம். முற்போக்கு இலக்கிய முயற்சிகள் காலூன்றி வளர்ந்த காலம் இது. பொதுவுடைமைச் சிந்தனையாளர்கள் தேர்ந்த இலக்கியப் படைப்பாளிகளாகவும் மலர்ந்த காகட்டம் இது.

1990இற்குப் பின் வந்த காலம் முற்போக்கு இலக்கியத்தின் மூன்றாவது காலகட்டம். சோவியத் வீழ்ச்சி, பொருளாதாரத்தில் முதலாளித்துவ உலகமயமாக்கல் தலைதூக்கிய காலம். முற்போக்கு இலக்கித்திற்கு எதிரான நவீனத்துவம், பின்நவீனத்துவம் போன்ற கருத்துக்கள் இலக்கியத்தில் புரையோடிய காலம். இவைகளை எதிர்த்து திரும்பவும் முற்போக்கு இலக்கியம் புதிய சக்தி பெறவேண்டிய காலம்."

இந்நிலை பொதுவாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்பட்டு வருகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எதிரொலி இன்று உலகம் முழுவதும் கேட்கிறது. முக்கியமாக வளர்ந்து வரும் நாடுகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக புதுப்புதுத் தத்துவங்களை அது உலகில் பரப்பி வருகிறது. இலங்கையிலும் அதன் பாதிப்புத் தெரிகிறது. முற்போக்கு சக்திகள் அரசியலில் எவ்வித மாற்றங்களைக் கொண்டுவந்தாலும், இனவாதம் அந்த சக்திகளை மழுங்கடிக்கச் செய்கிறது. சிங்களவரும் தமிழரும் ஒருவரையொருவர் எதிரிகளாகப் பார்க்கிறார்கள். இரு சமூகங்களிடையேயும் நட்புறவும் நல்லெண்ணமும் வளர்ந்தால்தான் முற்போக்கு சக்திகள் திரும்பவும் தலைதூக்கலாம்.

இலங்கையின் முற்போக்கு இலக்கியத்திற்கு வழிகாட்டியாக அமைந்தவர் கைலாசபதி. கைலாசபதியின் சங்க இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள், அவர் பல்லவ – சோழர் கால இலக்கியங்கள் பற்றி எழுதிய கட்டுரைகள், இருபதாம் நூற்றாண்டு நாவல் இலக்கியத்தைப் பற்றிய அவரது முடிவுகள், இவைகளையெல்லாம் ஒருமித்துப் பார்க்கும்போது, முற்போக்கு இலக்கியத்திற்கு அடிகோலியவர் இவரே என்ற முடிவுக்கு நாம் வரலாம். *

## *மேதின வாழ்த்துக்கள்*

**உலகத் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர தினமான மேதினத்தையொட்டி எமது வாசகர்கள் அனைவருக்கும் மேதின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**–வானவில் ஆசிரியர் குழு**

**"எழுத்தாளர்கள் ஆகாயத்தில் கோட்டை கட்டுகிறார்கள். வாசகர்கள் அந்தக் கோட்டையில் குடியிருக்கிறார்கள். அதற்கான வாடகையை புத்தக வெளியீட்டாளர்கள் வசூலிக்கிறார்கள்"**

***~ மார்க்ஸிம் கோர்க்கி***

# இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சியின் வெற்றி இந்துத்துவ பாசிச சக்திகளின் வெற்றியாகும்!

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என முதலாளித்துவ ஊடகங்களால் வர்ணிக்கப்படும் இந்தியாவின் பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. பெரும்பாலானோர் எதிர்பார்த்தபடி பாரதீய ஜனதாக் கட்சி வெற்றி பெற்று அக்கட்சி அறிவித்த பிரதம மந்திரி வேட்பாளர் – முன்னாள் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி பிரதமராகி இருக்கிறார். பாரதீய ஜனதாவின் வெற்றி அக்கட்சியே எதிர்பார்க்காத அளவுக்கு மிகப்பெரும் வெற்றியாக (284 இடங்கள்) அமைந்திருக்கிறது. அதேநேரத்தில் 100 ஆசனங்கள் வரை பெறும் என எதிர்பார்க்கப்பட்ட காங்கிரஸ் கட்சி 50இற்கும் குறைவான ஆசனங்களை மட்டும் பெற்று மிகப்பெரும் தோல்வியைச் சந்தித்திருக்கிறது.

தமது மூன்றாவது அணிதான் அடுத்த ஆட்சியைக் கைப்பற்றும் என கற்பனாவாதத்தில் மிதந்த இடதுசாரிகள் வரலாற்றில் இல்லாத அளவுக்கு மிகப்பெரும் சரிவை அடைந்திருக்கிறார்கள். தொங்கு பாராளுமன்றம்தான் அமையும், அப்படி அமைந்தால் இடதுசாரிக் கட்சிகளினதும், ஏனைய சிறிய கட்சிகளினதும் ஆதரவுடன் தான் பிரதம மந்திரியாக முடி சூடலாம் என்ற கற்பனையில் மூழ்கியிருந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் கனவிலும் இடி விழுந்திருக்கிறது.

பாரதீய ஜனதாக் கட்சி இந்துத்துவ சங் பரிவாரங்களின் ஒரு கூட்டு என்பதும், அதன் கொள்கை இந்துத்துவ பாசிசம் என்பதும் ஒருபுறமிருக்க, அது அரசியல் ரீதியாக ஏகாதிபத்திய சக்திகளின் விசுவாசி என்பதும், அது வர்க்க ரீதியாக பெரும் முதலாளித்துவ சக்திகளின் செல்லப்பிள்ளை என்பதும் இன்னொரு பக்க உண்மையுமாகும்.

இருந்தும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக அகிம்சை ரீதியிலும், ஆயுதப் போராட்ட ரீதியிலும் போராடி தமது பொன்னான சுதந்திரத்தைப் பெற்ற இந்திய மக்கள் இதுவரை காலமும் ஏதோ ஒரு வகையில் கட்டிக்காத்து வந்த மதச்சார்பற்ற நிலையையும், ஜனநாயகத்தையும் ஒருபக்கம் தள்ளி வைத்துவிட்டு எப்படி இந்துத்துவ பாசிச சக்திகளுக்கு ஆதரவளித்தார்கள் என்ற கேள்வி பலரது மனதையும் குடைந்து வருகிறது.



பலர் சொல்வது போல மோடி என்ற தனிமனிதனின் அலைதான் மக்களைக் கவர்ந்ததா? அல்லது காங்கிரஸ் கட்சியின் 10 ஆண்டுகால ஆட்சியில் தலைவிரித்தாடிய ஊழல், மோசடி, இலஞ்சம், நிர்வாகத்திறமையின்மை என்பனதான் காரணமா? அல்லது இடதுசாரிக் கட்சிகள் சொல்லி வருவது போல, அந்நிய கம்பனிகள் இந்திய மக்களைத் கட்டுப்பாடில்லாமல் சுரண்ட அனுமதித்தமை, விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகள்தான் மக்களை பாரதீய ஜனதாவின் பக்கம் தள்ளியதா?

சொல்லப் போனால் மேற்குறித்த அத்தனை விடயங்களும்தான் பாரதீய ஜனதாக் கட்சியின் அமோக தேர்தல் வெற்றிக்குச் சாதகமான நிலையைத் தோற்றுவித்தன எனக் கூறலாம். ஆனால் அதேநேரத்தில் இந்திய ஜனநாயகம் எனப் பெரிதாகப் பேசப்படுவது அல்லது பெரும்பான்மை வெற்றி எனப் பேசப்படுவது கூட சரியான கணிப்பீடு அல்ல என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மிகப்பெரிய வெற்றி பெற்ற பாரதீய ஜனதா பெற்ற மொத்த வாக்குவீதம் அரைவாசியான ஐம்பது வீதத்துக்குக் குறைவானதுதான். அதேபோல தமிழ் நாட்டிலுள்ள 39 தொகுதிகளில் 37 தொகுதிகளை வென்ற ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க பெற்ற வாக்குகள் 43 வீதம் மட்டுமே. அதேவேளை ஒரு தொகுதியையும் பெறாத தி.மு.க 23 வீதமான வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இலங்கையில் இருப்பது போன்று விகிதசாரத் தேர்தல் முறை இருந்திருக்குமாக இருந்தால், மத்தியில் பாரதீய ஜனதாவோ அல்லது தமிழகத்தில் அ.தி.மு.கவோ இவ்வளவு தொகுதிகளைப் பெற்றிருக்க முடியாது.

### பன்னீர்ச்செல்வம்

இன்னொரு முக்கியமான விடயம் இந்தியப் பாராளுமன்றத்தில் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு பாரதீய ஜனதா ஊடாக பல கோடீஸ்வரர்கள் இம்முறை பாராளுமன்றத்துக்குள் நுழைந்திருக்கிறார்கள். அதேநேரத்தில் தெரிவு செய்யப்பட்ட 543 பாராளுமன்ற உறுப்பினர்களில் 34 வீதமானவர்கள் (1/3 )குற்றப் (கிரிமினல்) பின்னணி உடையவர்கள் (ஏறத்தாழ 180 பாராளுமன்ற உறுப்பினர்கள்) என்ற விடயமாகும். இந்த இரண்டு விடயங்களும் பெரிதாகப் பேசப்படும் இந்திய ஜனநாயகத்தின் மறுபக்க முகமாகும்.

ஆனால் ஒரு முக்கியமான விடயம் என்னவெனில், பாரதீய ஜனதாக் கட்சி மக்களின் ஆதரவைப் பெற்று அமோக வெற்றியைப் பெற்றிருந்தாலும்,

காங்கிரஸ் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு மாற்றாக எந்தவொரு கொருளாதாரக் கொள்கைகளையும் முன்வைத்து தேர்தலில் போட்டியிடவில்லை. பதிலாக காங்கிரஸ் கட்சி மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை மட்டுமே அது பிரச்சாரம் செய்தது. அதன்மூலம் காங்கிரஸ் அரசின் மீது வெறுப்புக் கொண்டிருந்த மக்களின் வாக்குகளைத் தங்குதடையின்றி அறுவடை செய்து ஆதாயம் பெற்றுக் கொண்டது.

காங்கிரஸ் கட்சி நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராக மேற்கொண்ட அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் குறித்தோ, பன்னாட்டுக் கம்பனிகளை இந்தியாவில் சில்லறை வர்த்தகத்தில் ஈடுபட அனுமதித்து உள்ளூர் சிறு வர்த்தகர்களின் வயிற்றில் அடித்தது பற்றியோ, எரிபொருள் விலையுயர்வு, விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகள் மூலம் மக்களை வாட்டி வதைத்தது குறித்தோ, பாரதீய ஜனதா வாயே திறக்கவில்லை. எனவே இந்த முக்கியமான விடயங்களில் காங்கிரஸ் கட்சியின் அடிச்சுவட்டையே, இன்னும் அதைவிட மோசமான பாதையிலேயே பாரதீய ஜனதா அரசாங்கமும் பயணிக்கும் என்பது திண்ணம்.

இந்த இடத்தில்தான் இந்தியப் பொதுமக்கள் பாரதூரமான தவறை இழைத்துத் தமது தலையில் தாமே மண்ணை அள்ளிப் போட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு அவர்களை மட்டும் குறை சொல்லியும் பிரயோசனம் இல்லை. காங்கிரசுக்கு மாற்றாகவோ அல்லது பாரதீய ஜனதாவுக்கு மாற்றாகவோ ஒரு சக்தியை உருவாக்கியிருக்க வேண்டிய இடதுசாரிக் கட்சிகள் அதைச் செய்யத் திறனற்றுப்போய் இருந்தன. அவர்களுடைய கடந்தகால தவறான செயற்பாடுகளால் மக்கள் அவர்கள் மீது நம்பிக்கை வைக்கும் நிலை இருக்கவில்லை.

முக்கியமாக மன்மோகன்சிங்கின் முதலாவது ஆட்சிக் காலத்தில் இடதுசாரிகள் ஓரளவு பலமாக இருந்து அந்த அரசுக்கு நிபந்தனையுடன் ஆதரவளிக்கும் நிலையும் தேவையும் இருந்தது. ஆனால் அந்த அரசு அமெரிக்காவுடன் செய்துகொண்ட அணுசக்தி உடன்படிக்கையை மட்டும் வைத்து இடதுசாரிக் கட்சிகள் அந்த அரசுக்கான ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்டனர். இந்த நடவடிக்கை மிக அவசரப்பட்டதும், தவறான தந்திரோபாயத்தைக் கொண்டதுமாகும். இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் ஆதரவைப் பெறுவதற்குப் பதிலாக அவநம்பிக்கையையே தோற்றுவித்தது.

அதன் விளைவுதான் மார்க்சிஸ்ட் கட்சி 34 வருடங்களாக மேற்கு வங்கத்தில் வைத்திருந்த ஆட்சி அதிகாரத்தை மம்தா பனர்ஜியிடம் இழக்க வைத்தது. அதன் தொடர்ச்சியாக தற்போது நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலும் மேற்கு வங்கத்தில் ஆக 2 தொகுதிகளை மாத்திரம் மார்க்சிஸ்ட் கட்சி பெரும் பிரயத்தனப்பட்டுக் கைப்பற்றியிருக்கிறது. தற்போது ஒரு தேசியக் கட்சியாக இருப்பதற்கு வேண்டிய 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்ற தகுதியையும் மார்க்சிஸ்ட் கட்சி இழந்துள்ளது.

தமிழ்நாட்டிலும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போட்டியிட்டும் 1 வீதத்திற்கும் குறைவான வாக்குகளையே பெற முடிந்துள்ளது. அதன் மூலம் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தமிழ்நாட்டில் அண்ணளவாக 4 வீத வாக்கு வங்கி இருக்கின்றது என்று இதுவரை இருந்து வந்த அபிப்பிராயம் தகர்ந்து போயுள்ளது. இந்த நிலைமை எதிர்காலத்தில் தமிழகத்தில் தேர்தல் கூட்டுகளில் கம்யூனிஸ்ட்டுகளின் பேரம் பேசும் சக்தியை நிச்சயம் பாதிக்கும்.

காங்கிரசை விட பாரதீய ஜனதா கட்சிதான் மிக ஆபத்தானது என்று தெரிந்திருந்தும், அந்த இரண்டு கட்சிகளையும் ஒரே தராசில் வைத்து எடை போட்டது இடதுசாரிக் கட்சிகள் செய்த இமாலயத் தவறு. உண்மையில் காங்கிரஸ் கட்சி நாட்டில் நடைபெற்ற ஊழலுக்கு முக்கியமான ஒரு பொறுப்பாளி என்றாலும், அதைவிட ஆபத்தானது தீவிரமான ஏகாதிபத்திய சார்பு இந்துத்துவ பாசிச சக்திகள் ஆட்சிக்கு வருவது. எனவே அக்கட்சி அதிகாரத்துக்கு வராமல் தடுப்பதற்கு முன்னுரிமை கொடுத்திருக்க வேண்டும்.

அவ்வாறு செய்வதானால் அதற்குள்ள ஒரே வழி இடதுசாரிகள் காங்கிரஸ் கட்சியுடன் குறைந்தபட்சம் ஒரு போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதுதான். அதேபோல தமிழ்நாட்டில் ஒன்றில் ஜெயலலிதா கொடுத்த ஒவ்வொரு தொகுதியை கம்யூனிஸ்ட் கட்சிகள் கௌரவமாகப் பெற்றிருந்தால் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களாவது கிடைத்திருக்கும். அதுசரிவரவில்லையென்றால், தி.மு.கவுடனும் காங்கிரஸ் கட்சியுடனும், இதர சில கட்சிகளுடனும் ஒரு கூட்டை உருவாக்கி, தமிழ்நாட்டில் ஐந்து முனைப்போட்டி என்ற நிலையை மாற்றி, அ.தி.மு.க எதிர் தி.மு.க கூட்டணி என்ற நிலையை உருவாக்கி இருந்தால், ஜெயலலிதா 37 ஆசனங்களை ஒருபோதும் பெற்றிருக்க முடியாது.

அப்படியான ஒரு நிலையை எடுக்கத் தவறியதின் மூலம், பாரதீய ஜனதாக் கட்சி அமோக வெற்றி பெறுவதற்கு இடதுசாரிகளும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர். இதுபற்றிய ஒரு அனுபவம் இலங்கை இடதுசாரிக் கட்சிகளுக்கும் உண்டு. சில சில்லறைப் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான கூட்டரசாங்கத்திலிருந்து (1970 — 77) வெளியேறி, 1977 பொதுத்தேர்தலைத் தனியாகச் சந்தித்தன. அதன் காரணமாக அத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சக்திகள் பிளவுபட்டதால், ஐ.தே.க மிகச்சுலபமாக ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. இதே தவறையே இந்திய இடதுசாரிகளும் இழைத்துள்ளனர்.

குறிப்பாக் கடந்த சில வருடங்களாக பிரகாஸ் கரத் தலைமையிலான

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு ரொட்ஸ்கியவாத அணுகுமுறையைப் பின்பற்றி அக்கட்சியைத் தொடர்ந்து அழிவுப்பாதையில் கொண்டு செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தமிழ்நாட்டில் ஜி.ராமகிருஸ்ணனின் தலைமையும் அதற்கு ஏதுவாகவே செயற்படுகின்றது.

எது எப்படியிருப்பினும் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள நரேந்திரமோடியின் பாரதீய ஜனதா அரசு, மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு விரோதமாக மிக விரைவில் மக்கள் மீது பல தாக்குதல்களை நடாத்தப் போவது நிச்சயம். அந்த அரசு ஏகாதிபத்தியத்துடன் மேலும் மேலும் நெருக்கமாகக் கூட்டுச் சேரும். அயல்நாடுகளுடன் உறவுகளை மோசமாக்கும். விலைவாசிகள், வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் அதிகரிக்கும். சிறுபான்மை இனங்கள், மதங்கள், வெகுஜன அமைப்புகள் மீதான அடக்குமுறை அதிகரிக்கும். ஜனநாயக சுதந்திரம், ஊடக சுதந்திரம் என்பன மோசமாக நசுக்கப்படும். ஒட்டுமொத்தமாக இதுவரைகாலமும் இந்தியாவில் இருந்த அரசுகளை விட மோசமான ஒரு அடக்குமுறை அரசாக நரேந்திரமோடியின் அரசு உருவெடுக்கும் என்பது நிச்சயம்.

எனவே இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கு இடதுசாரிக் கட்சிகளும், ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற சக்திகளும் ஒரு தெளிவான வியூகத்தை வகுத்துக் கைகோர்த்துச் செயல்படுவது அவசியம். அப்படியான ஒரு பரந்துபட்ட இந்துத்துவ பாசிச விரோத அணியை உருவாக்குவதற்கு முதலில் இடதுசாரிக் கட்சிகளும் காங்கிரஸ் கட்சியும் ஒரு குறைந்தபட்ச புரிந்துணர்வுக்காவது வருவது அவசியமானது. அப்படிச் செய்யாதுவிடின், இடதுசாரிகளினதும் காங்கிரஸ் கட்சியினதும் நிலை மேலும் மேலும் சரிவை நோக்கியே செல்லும் என்பது மட்டும் நிச்சயம். *

---

முன்பக்கத்தொடர்ச்சி...

காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்தன. இந்த இரு கட்சிகளும் ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தால், தமிழ் பகுதியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவும்படி அந்த அரசை அன்றே வலியுறுத்தியிருக்கலாம்.

ஆனால் இந்த இரு கட்சிகளும் தமிழ் பல்கலைக்கழகம் – இந்துப் பல்கலைக்கழகம் என குடுமி பிடிச்சண்டையில் இருந்ததால், அந்த அரசின் முதலாவது சிம்மாசனப் பிரசங்க உரையின் போது தமிழ் பகுதியில் பல்கலைக்கழகம் அமைக்கவென 10 ரூபா அடையாள மானியம் ஒதுக்கிய அரசாங்கம் 'நீங்கள் இருவரும் உங்களுக்கு என்ன பல்கலைக்கழகம் வேண்டும் என முடிவு செய்து கொண்டு வாருங்கள், அதன்பின்னர் பல்கலைக்கழகம் அமைக்கின்றோம்' என்று சொல்லித் தப்பிக் கொண்டது. அதன்பின்னரும் இந்த இரு கட்சிகளும் ஒரு உடன்பாட்டிற்கு வராமல் வீம்பு பண்ணியதால், அந்தச் சந்தர்ப்பமும் நழுவிப்போனது.

தமிழரசுக்கட்சி தான் தனியாகத் தமிழ் பல்கலைக்கழகம் அமைக்கப் போவதாகக் கூறி திரிகோணமலையில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணியைப் பெற்றதுடன், அதற்காக வர்த்தகர்கள், பொதுமக்களிடம் பெருந்தொகையான நிதியும் திரட்டியது. ஆனால் அந்தக் காணிக்கும் நிதிக்கும் என்ன நடந்தது என்பது இன்று யாருக்கும் தெரியாது.

இந்த சூழ்நிலையில் 1970 தேர்தலில் சிறீலங்கா – சமசமாஜ – கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமோக வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தது. அந்த அரசில் தமிழ் பேசும் முஸ்லீமான கலாநிதி அல்லாஹ் பதியுதீன் முகமது கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டதுடன், தமிழரான செல்லையா குமாரசூரியரும் முக்கியமான ஒரு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அத்துடன் சமசமாஜக் கட்சித் தலைவர்களான கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோரும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமனும் முக்கியமான அமைச்சர்களாக இருந்தனர்.

இந்த இடதுசாரி மற்றும் தமிழ் – முஸ்லீம் அமைச்சர்களின் முயற்சியால் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கும் தீர்மானம் மந்திரிசபையில் ஏற்கப்பட்டு, அதற்காக உடனடியான செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டது.

அதேநேரத்தில் இந்தப் பல்கலைக்கழக முயற்சியை ஊக்குவிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் 'யாழ்.பல்கலைக்கழக வளாக விஸ்தரிப்பு இயக்கம்' என்ற ஒரு அமைப்பும் உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக சேர்.பொன்.இராமநதனின் மருமகனும், தமிழ் காங்கிரஸ் கட்சிப் பிரமுகரும், முன்னாள் மூதவை (செனட்) உறுப்பினருமான பிரபல சட்டத்தரணி எஸ்.ஆர்.கனகநாயகம் செயற்பட்டார். இந்த அமைப்பில் யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த கல்விமான்களும் இடதுசாரிச் சிந்தனையாளர்களுமான மு.கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், எம்.பேராயிரவர், அ.விசுவநாதன், ஆர்.ஆர்.தருமரத்தினம், வித்துவான் க.ந.வேலன், டாக்டர் சு.வே.சீனிவாசகம், எஸ்.சிவபாதசுந்தரம், ஒறேற்றர் சி.சுப்பிரமணியம், ஏ.எஸ்.கனகரத்தினம் உட்படப் பலர் இணைந்து பணியாற்றினர்.

அத்துடன் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தின் முதல் தலைவராக மிகப்பொருத்தமான முறையில் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களை அரசாங்கம் நியமித்தது. அவர் நியமனம் பெற்றவுடனேயே யாழ்ப்பாணம் வந்து பல்கலைக்கழகம் அமைய இருந்த திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிக்குத் தினசரி சென்று கட்டிட நிர்மாணப் பணிகளை தானே நேரடியாக மேற்பார்வை செய்து திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

1970இல் சிறீமாவோ தலைமையிலான மக்கள் முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததில் இருந்து பல்வேறு விதமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த தமிழரசுக்கட்சி இந்தப் பல்கலைக்கழகம் அமைவதைத் தடுப்பதற்கும் பலவழிகளில் சூழ்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது. தங்களால் கொண்டுவர முடியாமல் போன ஒரு பல்கலைக்கழகத்தை இடதுசாரிகளின் முயற்சியால் கொண்டு வருவதா என்ற காழ்ப்புணர்ச்சியால் அவர்கள் பலவிதமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கைலாசபதி அவர்கள் பல்கலைக்கழகத் தலைவராக நியமிக்கப்பட்டதும் யாழ்ப்பாணம் வந்த அவர் வண்ணார்பண்ணையில் இருந்த மைத்துனர் கே.பொன்னம்பலம் (பின்னாளில் யாழ்.அரச அதிபராக இருந்தவர்) அவர்கள் வீட்டில் தங்கியிருந்தார். இதை அறிந்த தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் சிலர் அவர் தங்கியிருந்த வீட்டின் மீது ஒரு இரவு கைக்குண்டொன்றை வீசினர். ஆனால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

கட்டிட நிர்மாணப் பணிகள் முடிவடைந்ததும் 1975ஆம் ஆண்டு ஒரு நல்ல நாளில் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க தனது அமைச்சர்கள், அரச உயரதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் சகிதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து யாழ்.பல்கலைக்கழகத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். அதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் நீண்டகாலக் கனவு ஒன்று பூர்த்தி செய்யப்பட்டது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை வரவேற்க வேண்டிய தமிழரசுக் கட்சியினர், அதற்குப் பதிலாக அரசியல் காழ்ப்புணர்ச்சி மற்றும் குரோத மனப்பான்மை காரணாக சிறீமாவோ யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இரண்டு நாட்களும் பொதுமக்கள் வெளியே நடமாடாமல், கடைகளைப் பூட்டி பூரண ஹர்த்தால் அனுஸ்டிக்கும்படி வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் மக்கள் அவர்களது வேண்டுகோளைப் பூரணமாக நிராகரித்து அவர்கள் முகத்தில் கரிபூசிவிட்டனர்.

பல்கலைக்கழகத் திறப்புவிழாவைக் கண்டு களிப்பதற்காக பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியதுடன், அவர் பயணம் செய்த வீதிகளின் இருமருங்கிலும் ஆயிரக்கணக்கில் கூடி நின்று தமது கைகளை அசைத்து அவருக்கு வாழ்த்தும் தெரிவித்தனர். அன்று மாலை யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் மைதானம் நிரம்பி வழியும் அளவுக்கு மக்கள் திரண்டு வந்தனர்.

அதன் பின்னர் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்துக்குத் தேவையான கட்டடங்கள் அமைக்கப்படும் வரை அதை இயங்க வைப்பதற்காக தற்காலிகமாக வட்டுக்கோட்டையிலிருந்த யாழ்ப்பாணக்கல்லூரியின் சில கட்டிடங்களைச் சவீகரிப்பது என அரசாங்கம் தீர்மானித்தது. அதை எதிர்க்கும்படி தமிழரசுக்கட்சியினர் யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகத்தைத் தூண்டிவிட்டனர். அத்துடன் நிற்காது அமிர்தலிங்கம் யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகிகள் சிலரைக் கூட்டிக்கொண்டு குருநாகல் கத்தோலிக்க ஆயரிடம் சென்று அவரையும் அழைத்துக்கொண்டு கொழும்பு சென்று, சிறீமாவோ அரசாங்கத்தில் இருந்த செவ்வாக்குமிக்க வலதுசாரி அமைச்சரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவைச் சந்தித்து யாழ்ப்பாணக் கல்லூரி சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்தும்படி வேண்டினர். ஆனால் அது நிறைவேறவில்லை (பின்னர் திருநெல்வேலி வளாகத்தில் விஞ்ஞானபீடத்துக்கு கட்டிடங்கள் கட்டியதும் யாழ்ப்பாணக் கல்லூரிக் கட்டிடங்கள் மீளவும் ஒப்படைக்கப்பட்டன)

ஆனால் சந்தர்ப்பம் கிடைத்த போதேல்லாம் தமிழரசுக்கட்சியினர் (1976இன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி) பல்கலைக்கழகத்தை செயற்படாமல் முடக்கவே முயன்றனர். ஒரு முறை பல்கலைக்கழகத்துக்கு முன்னால் மோட்டார் சைக்கிள் திருத்தகம் வைத்திருந்த ஒருவருக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கும் ஒரு தனிப்பட்ட தகராறு ஏற்பட்ட போது, அதை அந்தப் பகுதியில் உள்ள தமிழர் கூட்டணியினர் அந்தப்பகுதி மக்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான மோதலாக உருமாற்றினர். பல மாணவர்கள் இரும்புக் கம்பிகளாலும் பொல்லுகளாலும் தாக்கப்பட்டனர். முத்திரைச்சந்தி பகுதியைச் சேர்ந்த ஒரு மாணவன் கத்திக்குத்துக்கும் இலக்கானார்.

பல்கலைக்கழகம் இயங்காமல் செய்யப்பட்டது. வீடுகளில் வாடகைக்குத் தங்கியிருந்த மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். பல்கலைக்கழகத்துக்குள் பாதுகாப்புத் தேடித் தங்கியிருந்த மாணவர்களுக்கு உணவு கொண்டு செல்ல முடியாதவாறு தடைகள் போடப்பட்டன. இறுதியாக பொலிசார் வரவழைக்கப்பட்டு வெளியிடத்து மாணவர்கள் அவர்களது வீடுகளுக்குப் பஸ்களில் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர். இந்தச் சம்பவங்களின் போது தமிழர் கூட்டணித் தலைவர்கள் யாருமே அங்கு வந்து நிலைமையைக் கட்டுப்படுத்த எந்த முயற்சிகளும் எடுக்கவில்லை. மாறாக தமிழரசுக்கட்சியின் முன்னாள் யாழ்.மாநகரசபை முதல்வர் சி.நாகராசா பல்கலைக்கழகம் அமைந்திருந்த பரமேஸ்வரா சந்தியில் தனது அடியாட்களுக்கு கொட்டகை ஒன்று போட்டுக் கொடுத்து 'தண்ணி வென்னி' எல்லாம் பரிமாறினார்.

இவையெல்லாம் மிதவாத தமிழ் தலைமை என்று சொல்பவர்களின் கைங்கரியங்கள். அதன் பின் புலிகளின் காலம் வந்தது. அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தை தமது உத்தியோகபூர்வமற்ற காரியாலயமாகவே மாற்றி வைத்திருந்தனர். தம்மை எதிர்த்தவர்கள் எல்லோரையும் கொல்லக்கூட அவர்கள் தயங்கவில்லை. தம்மை எதிர்த்தவன் என்ற ஒரே காரணத்துக்காக புலிகளின் யாழ்.தளபதி கிட்டு விஜிதரன் என்ற மாணவனைக் கடத்திச் சென்று 'காணாமல்' ஆக்கினான். இன்றுவரை அவனை எங்கே எரித்தார்கள் அல்லது புதைத்தார்கள் என்றே தெரியாமல் இருக்கிறது.

அதேபோல தம்மை எதிர்த்தவன் என்ற காரணத்துக்காக பூநகரியைச் சேர்ந்த விமலேஸ்வரன் என்ற மாணவனை நயவஞ்சகமாக நடுத்தெருவில் வைத்துச் சுட்டுக் கொன்றார்கள். பின்னர் தில்லைநாதன், செல்வி, மனோகரன் போன்றவர்களைக் கடத்தி சித்திரவதை செய்து கொலை செய்தனர். மருத்துவபீட உடற்கூற்றியல்துறை விரிவுரையாளா கலாநிதி ராஜினி திராணகமவை நடுவீதியில் பட்டப்பகலில் சுட்டுக் கொன்றனர். மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்களை வேட்டையாட நாயாய் அலைந்தனர். அதனால் அவர்கள் வேலையை விட்டுத் தப்பியோடி தென்னிலங்கையில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டி வந்தது.

1990இல் புலிகளை யாழ்ப்பாணத்தலிருந்து இராணுவம் விரட்டிய பின்னர் பல்கலைக்கழகத்தை இயங்கவிடாமல் செய்து அதை வன்னிக்குக் கொண்டு போவதற்கு புலிகளின் ஆலோசகர் போன்று செயற்பட்ட ஒருவரும், தமிழ்த்துறை பேராசிரியர் ஒருவரும் பகீரத முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் பெரும்பான்மையான விரிவுரையாளர்களினதும் மாணவர்களினதும் முயற்சியால் அவர்களது திட்டம் முறியடிக்கப்பட்டது.

இன்று போல் அல்லாது கைலாசபதி அவர்களின் காலம் யாழ்.பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை ஒரு பொற்காலம் என்றுதான் சொல்ல வேண்டும். அவர் இந்தப் பல்கலைக்கழகத்தைக் கட்டியெழுப்புவதற்காக முற்போக்கு சிந்தனையும், மிகுந்த புலமைத்துவமும், தூரநோக்கும், அர்ப்பண சிந்தையும் கொண்ட மிகச் சிறந்த விரிவுரையாளர் குழாமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குக் கொண்டு வந்தார்.

கா.இந்திரபாலா, கா.சிவத்தம்பி, எம்.ஏ.நுஃமான், ப.சந்திரசேகரம், சித்திரலேகா மௌனகுரு, மு.நித்தியானந்தன், கே.குணரத்தினம், எஸ்.இராமகிருஸ்ணன், எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி), வண.பிதா ஜெயசீலன், ஏ.ஜே.கனகரத்தினா, சோ.கிருஸ்ணராஜா, கே.சின்னத்தம்பி, பார்வதி கந்தசாமி, நா.சுப்பிரமணியஐயர் என பலர் அவரது தலைமையின் கீழ் ஆரம்ப காலங்களில் பணிபுரிந்துதான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினர்.

புலிகள் அந்த மகத்தான பாரம்பரியம் உள்ள பல்கலைக்கழகத்தை இரத்த வடை வீசும் சாக்கடையாக மாற்றி தமது எண்ணங்களை அங்கு நிறைவேற்றி வந்தனர்.

2009இல் புலிகள் முற்றாக முறியடிக்கப்பட்ட பின்னர்தான் பொதுவாக தமிழ் மாணவர்களின் வாழ்விலும், யாழ்.பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளிலும் ஒரு பொற்காலம் பிறந்தது. தமிழ் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைக் குழப்பி, மாணவர்களைத் தமது படையணிகளுக்கு வலுக்கட்டாயமாகப் பிடித்துச் சென்ற துயரமான காலம் ஒரு முடிவுக்கு வந்தது.

இந்த நல்ல நிலைமைமையைச் சீர்குலைப்பதற்குத்தான் இன்று சில சக்திகள் மாணவர் குழுக்கள் சிலவற்றுக்குப் பின்னால் நின்று செற்படுகின்றன என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. பிற்போக்கு தமிழ் அரசியல் சக்திகளும் சரி, புலிகளும் சரி காலம்காலமாக அழிவு வேலைகளைத்தான் செய்து வருகிறார்களேயொழிய, தமிழ் மக்களுக்காக ஒரு சிறு துரும்பைத்தன்னும் தூக்கிப் போட்டது கிடையாது. இந்த உண்மையை தமிழ் மக்களும் மாணவ சமூகமும் உணர வேண்டும்.

இப்பொழுது யாழ்.பல்கலைக்கழகத்தையும் முடக்குவதற்கு பலத்த முயற்சிகள் செய்கிறார்கள். இந்தப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வருவதற்கு நமது முன்னைய சந்ததியினர் எத்தகைய பெரும் முயற்சிகளைச் செய்தார்கள் என்பதை அறியாமல் சில ஈனர்கள் செய்யும் கைங்கரியத்தால் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் சிதைந்து போவதை தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

கல்வியே எமது வாழ்வின், எமது மேன்மையின் ஜீவாதாரம் என்ற உண்மையை எல்லோரும் உயர்த்திப் பிடிப்பது இந்தச் சந்தர்ப்பத்தில் அவசியம். *

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

### கடைசிப் பக்க குறிப்புகள்:

# உருத்திரகுமாரன் யாருடன் நிற்கிறார்?

**ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் பிரபல சட்டத்தரணியாகவும், தமிழ் காங்கிரஸ் பிரமுகராகவும், யாழ்ப்பாணம் மாநகர முதல்வருமாக இருந்த வி.விசுவநாதனின் செல்வப் புதல்வர் உருத்திரகுமாரன் என்பவர் அமெரிக்காவில் இருந்துகொண்டு 'நாடு கடந்த (நாடில்லாத) தமிழீழ அரசாங்கம்' என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை நடாத்தி வருகின்றார்.**

அவரது 'அரசாங்கத்தை' அங்கீகரித்த ஒரேயொரு நாடு ஒரு வருடத்துக்கு முன்னர் உருவான தென் சூடான் மட்டுமே! (இவர்களின் நட்பு நாடு உருவான பின்னர் அந்நாட்டில் அதிகாரப் போட்டியால் இவர்களுக்கு விருப்பமான குருதி ஆறாக ஓடுவதைப் பார்த்து உலகம் திகைத்து நின்றாலும் இவர்களுக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை)

**இப்பொழுது இந்தியாவில் புதிதாக பிரதமர் பதவிக்கு வந்துள்ள நரேந்திரமோடி விரைவில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கிறார். அப்பொழுது 'தமிழீழப் பிரதமர்' உருத்திரகுமாரனையும் மோடி சந்திப்பார் என தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சர்களில் ஒருவர் அண்மையில் திருவாய் வேறு மலர்ந்திருக்கிறார்! (சில வேளைகளில் ஒபாமாவைச் சந்திக்கும் சாக்கில் உருத்திரகுமாரனைச் சந்திக்கத்தான் உண்மையில் மோடி செல்கிறாரோ என்னவோ?)**

இந்த உருத்திரகுமாரனின் நிறுவனம் அடிக்கடி அறிக்கைகளையும் ஊடகங்களுக்கு (வானவில் உட்பட) அனுப்பி வருகிறது. அந்த அறிக்கைகளில் சில முசுப்பாத்திக் கதைகளை அடிக்கடி காண முடிகிறது.

அப்படி ஒரு அறிக்கை அண்மையில் வந்தது. அதில் இலங்கை அரசின் போர்க்குற்றவாளிகள் என்று சொல்லி சிலரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளில் செயற்படும் சில புலிசார்பு அமைப்புகளையும், தனிநபர்களையும் தடை செய்து அறிவிப்பு வெளியிட்ட பின்னர் உருத்திரகுமாரனின் அறிக்கை வந்துள்ளது. பதிலடி போலும்.

சில நேரங்களில் சில நகைச்சுவைகளிலும் ஆழமான அர்த்தங்கள் பொதிந்திருப்பதுண்டு. உருத்திரகுமாரனின் இந்தப் போர்க் குற்றவாளிகள் அறிக்கையிலும் அப்படியான விடயம் உள்ளே பொதிந்திருக்கிறது.

உருத்திரகுமாரனின் போர்க் குற்றவாளிப் பட்டியலில் முதலாவதாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பெயர் உள்ளது. அப்படியே அவரது சகோதரர் கோத்தபாய, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பல முன்னாள் இந்நாள் இராணுவ உயரதிகாரிகள் எனப் பலரின் பெயர்கள் உள்ளன. இந்தப் பட்டியலில் ஒரு விசேடம் என்னவென்றால், முதல் மூன்று நான்கு பெயர்களுக்குள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பெயரும் இருக்கிறது!

அப்படியானால் முன்னாள் பிரதமரும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் பெயரும் கட்டாயம் இருக்க வேண்டுமே எனத் தேடிப்பார்த்தால்... இல்லவே இல்லை. வேறு யாராவது ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்களின் பெயர்களாவது இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

1977இல் ஆட்சிக்கு வந்த ரணிலின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் அவரைத் தொடர்ந்து ஆர்.பிரேமதாசவும் 1994 வரை தொடர்ச்சியாக 17 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்தனர். அவர்கள் காலத்தில் 1977, 1983, 1981 என மூன்று தடவைகள் தமிழர்களுக்கு எதிரான இன வன்செயல்கள் அவர்களது அரசாங்கங்களாலேயே திட்டமிட்ட முறையில் கட்டவிழ்த்துவிடப்பட்டன. தமிழ் மக்களுக்கு எதிரான போரும் அவர்களாலதான் ஆரம்பிக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க ஜே.ஆரின் அரசிலும், பிரேமதாசவின் அரசிலும் முக்கியமான அமைச்சராக இருந்து



அந்தக் காலப் போர் நடவடிக்கைகளில் ஒரு பங்காளியாக இருந்தவர். 83ஆம் ஆண்டு இனவன்செயலின் போது கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் தமிழ் வர்த்தகர்களின் கடைகளைச் சூறையாடிய ஐ.தே.க காடையர் குழுக்களுக்கு பிரேமதாசவும், ரணிலும் தான் பொறுப்பாக இருந்தவர்கள் என்ற பேச்சு பரவலாக உண்டு. அதுபற்றி பின்னர் ஒருமுறை பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்த ரணில், ''சில்லறை வர்த்தகத்தில் தமிழர்கள் போட்டியிட்டதால்தான் சிங்களவர்கள் தமிழர்களின் கடைகளைச் சூறையாடினார்கள்'' என நியாயப்படுத்தினார்.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட நல்லதொரு தீர்வுப் பொதியை ஐ.தே.க எம்.பிக்கள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயே தீ வைத்து எரித்த போது ரணில் அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்ததை தொலைக்காட்சிகள் எல்லாம் ஒளிபரப்பின. அந்தத் தீர்வுத் திட்டத்தை ஐ.தே.க ஏன் எதிர்த்தது என விளக்கம் கொடுத்த ரணில், 'அது தமிழர்களுக்கு அளவுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்ததுதான் காரணம்' என்றார்.

இப்படியான ரணில் போன்றவர்களைத் தவிர்த்துவிட்டு இன்றைய அரச தலைவர்களையும், முன்னைய அரச தலைவர் சந்திரிகாவையும் மட்டுமே உருத்திரகுமாரன் போர்க் குற்றவாளிகளாக அறிவித்திருக்கிறார்.

நல்லது உருத்திரகுமாரன் அவர்களே! நீங்கள் வெளிப்படையாக உங்கள் சகபாடிகள் யார்? எதிரிகள் யார்? என்பதை இனம் காட்டியதற்காக உங்களுக்கு நிச்சயம் நன்றி சொல்லத்தான் வேண்டும்.*